உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

தொகுதி 9 | இரக்தாக்ஷி௵ ஆனிமீ ௧௨ 1924௵ ஜூன்மீ 14உ | பகுதி 12

கடவுள் வணக்கம்.

ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
வாலமமு தாக விலையோ
வக்கடலின் மீதுவட வனல்நிற்க வில்லையோ
வந்தரத் தகில கோடி
தாழாது நிலைநிற்க வில்லையோ மேருவுந்
தனுவாக வளைய விலையோ
சத்தமே கங்களும் வஜ்ரதர னாணையிற்
சஞ்சரித் திடவில் லையோ
வாழாது வாழவே யிராமனடி யாற்சிலையு
மடமங்கை யாக விலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக
மார்க்கத்தில் வைக்க விலையோ
பாழான வென்மனங் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக்கரு மையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந் தமே. (1)

செய்யுந் தவஞ்சற்று மில்லாத நானுன் றிருவடிக்கே
கொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர்குழாத் துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பிநின் றாடிக் கசிந்துருகி
உய்யும்படிக் கருள்செய்வ தென்றோ புலியூ ரத்தனே. (2)

அத்தனைச் சிற்றம் பலவனை யென்னுயி ராகிநின்ற
சுத்தனைச் சுத்த வெளியா னவனைச் சுகவடிவாம்
நித்தனை நித்த நிராதார மாகிய நின்மலனை
எத்தனை நாள்செல்லு மோமன மேகண்டி றைஞ்சுதற்கே. (3)

அரும்பொருள் விளக்கம்.

1. ஆழ் ஆழி=ஆழமாகிய கடல்.

ஒரு சிறிய குளம் அல்லது ஏரிக்கும் தக்க கரை யிருக்கவேண்டியது அவசியமாயிருக்க 5, 6, சில விடங்களில் 7, 8 மைல்கள் ஆழமுடைய அகன்ற கடல் கரையில்லாமலே நிலைத்திருக்கிறது. இது ஈசுவரனுடைய அபூர்வ சக்தியைக் காட்டுகிறது.

ஆலம் அமுதாகவில்லையோ=உண்டாரைக் கொல்லும் குணமுடைய விடம் உணவாகிவிடவில்லையோ.

இது திருப்பாற்கடல் கடையப்பட்டபோது அதில் உண்டான விஷத்தைப் பரமசிவம் அருந்தி தேவர்களுக்குத் துன்பம் நேராவண்ணம் காப்பாற்றி யருளினதைக் குறிக்கிறது.

"அக்கடலின்மீது வடவனல் நிற்கவில்லையோ" என்றது, கடல் எல்லை கடந்து செல்லாவண்ணம் பரமசிவம் பெட்டைக் குதிரையின் வடிவமாக வடவாமுக அக்னியைக் கடல் மத்தியில் நிறுத்தி யிருக்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறதைக் குறிக்கிறது.

"அந்தரத்து அகிலகோடி தாழாது நிலைநிற்கவில்லையோ"—இப்பூமி உருண்டை வடிவமாக விருக்கிறது. இதைச் சூழ்ந்து எல்லாப் பக்கங்களிலும் ஆகாயமே யிருக்கின்றது. இப்பூமியைப்போல் சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் முதலியவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அண்டமே. இந்த அண்டங்களெல்லாம் எவ்வித ஆதரவுமின்றி வெட்டவெளியாகிய ஆகாயத்தில் நின்றுகொண் டிருக்கின்றன. இதுவும் கடவுளின் அதியற்புதச் சாமார்த்தியங்களுக்கு ஒரு அத்தாட்சியே.

மேரு=மகம்மேருமலை. தநு=வில்.

திரிபுரதகனம் செய்தகாலத்தில் பரமசிவம் மேருமலையையே வில்லாக அமைத்துக்கொண்டார் என்பதனால் "மேருவும் தநுவாக வளைய வில்லையோ" என்றனர்.

சத்தமேகங்கள்=1. சம்வர்த்தம், 2. ஆவர்த்தம், 3. புட்கலாவர்த்தம், 4. சங்காரித்தம், 5. துரோணம், 6. காளமுகி, 7. நீலவருணம் என்ற ஏழு மேகங்கள். இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ என்பவற்றைப் பொழிவன.

வஜ்ரதரன்=வஜ்ராயுதத்தையுடைய இந்திரன்.

மேகங்களையெல்லாம் வரைகடந்து செல்லாது காப்பவன் இந்திரன் ஆதலின் "சத்தமேகங்களும் வஜ்ரதரன் ஆணையில் சஞ்சரித்திடவில்லையோ" என்றார்.

"இராமனடியாற் சிலையும் மடமங்கையாகவிலையோ" என்றது, ஸ்ரீ ராம பிரான் பாதம் பட்டமாத்திரத்தில் கல்லாகச் சபிக்கப்பட்டிருந்த அகலிகை சாபவிமோசனம் பெற்று பழையபடி பெண்ணுருவ மடைந்ததைக் குறிக்கிறது.

மணிமந்திரமாதி=மணி, மந்திரம், ஔடதம்.

இவற்றால் உலகில் வியாதிகளை நீக்குதல் முதலிய பல அரிய காரியங் களைச் செய்கிறார்கள்.

இத்தகைய அரிய காரியங்களெல்லாம் சுலபமாக நடைபெறும்போது அடியேன் மனம் குவியும்வண்ணம் ஒரு உபாயம் செய்வது உமக்கு அருமையாகுமோ? ஆகாது என்றபடி.

இதனால் மனதை யடக்குவது மிகக் கஷ்டசாத்தியமான காரியம் என்றும், ஈசுவரன் அருள் பெற்றாலே அது அநுகூலமாகுமென்றும், அதாவது பக்தி யவசியம் வேண்டுமென்றும் நாம் உணரல்வேண்டும்.

2. செய்யும் தவம் சற்றுமில்லாத நான்=செய்யவேண்டிய தவத்தைக் கொஞ்சமும் செய்யாத நான்.

புலியூர் அத்தன்=சிதம்பரத்தில் பஞ்சகிருத்தியத் தாண்டவம் புரியும் ஸ்ரீ நடராஜப்பெருமான்.

"பரம்பொருளே! உன்னருளைப் பெறுதற்கு நெறியோடு ஒரு தவத்தையும் செய்யாத நான் நின்னடியார் கூட்டத்தோடு சேர்ந்து சரியை கிரியைகளால் நின்னைப் பூஜித்து, அதனால் எனக்கு நின்னிடம் பூரண பக்தி யுண்டாகும் வண்ணம் அருள்புரியவேண்டும்" என்பது இதன் கருத்தாம்.

இதில் பக்தி இன்றியமையாததென்பதும், அப்பக்தி அடியார்க்குத் தொண்டுபுரிவதாலும் அவர்கள் சகவாசத்தாலும் கிடைக்குமென்பதும், அப்பக்தியுண்டாவதற்கும் அவனருள் வேண்டுமென்பதும் உணரக் கிடக்கின்றன.

"அவனருளாலே அவன்தாள்வணங்கி"

என்றனர் மாணிக்கவாசகரும்.

அடியார்கள் பணியைப்பற்றி தாயுமான சுவாமிகளே "அன்பர்பணி செய்யவென்னை, யாளாக்கி விட்டுவிட்டால் — இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" என்றருளினர்.

3. சிற்றம்பலவன்=சித்+அம்பலவன்.

சித்=சித்தம்: அம்பலம்=ஆகாயம்.

'சித்தத்திலுள்ள ஆகாயத்தில் நடித்துக்கொண்டிருப்பவன்' என்பது இதற்குப் பொருள். மனதின்கண்ணுள்ள இராகத்துவேஷாதி குணங்களனைத்தும் அழிக்கப்பட்டபோது அதன் இரஜோதமோ குணங்கள் நசி

த்து சத்துவகுணமாகிய பரிசுத்த உள்ளமாய் நிற்கும். அந்த உள்ளமாகிய சிதாகாயத்தில் ஆண்டவன் ஆனந்தத்தாண்டவம் புரிகின்றார்—இக்குறிப்பை யாவர்க்கும் விளங்கச்செய்யவே சிதம்பரம் (சித்+அம்பரம்—அம்பரம்=ஆகாயம்) என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் நடராஜர் நடனம்புரிகின்றார். சிற்றம்பலவன் என்பதும் அவர் நாமமேயாகும்.

சுத்தன்=நின்மலன்.

சுத்தவெளி=ஞானகாயம்.

சுகவடிவானவன்=ஆனந்தசொரூபி.

நிராதரமானவன்=யாவற்றிற்கும் தான் ஆதாரமாயிருப்பதன்றி தனக்கோராதாரம் இல்லாதவன்.

ஆனந்தபோதினி

இரக்தாட்சி௵ ஆனி௴ ௧௳

நம் மக்களின் பரிதாப நிலைமை.

பூவுலகில் புண்ணிய பூமியாயிலங்குவது இப்பாரத பூமியாகிய நம் தாய்நாடேயாகும். தெய்வபக்தியும் ஆன்மஞானமும் பிறந்தோங்கி ஒளிர்வது இப்பூமியிலேயே. சிறந்த பக்தசிகாமணிகளும், நித்தியாநித்திய விவேகமுடைய முமுட்சுக்களும், யோகிகளும், ஞானிகளும், துறவிகளும், மகரிஷிகளும் வாழையடி வாழையாய் தோன்றிக்கொண்டிருப்பதும் இப்பூமியிற்றான். முற்காலத்தில் சிறுவயதிலேயே காரண குருவை யடுத்து அவரிடம் சிசுருஷைசெய்து அவரருள்பெற்று ஆத்மஞானமடைவது வழக்கமாகவிருந்தது. அதனால் அக்காலத்தில் அனேகர் ஞானிகளாகவும், துறவிகளாகவும், மகான்களாகவும் இருந்தார்கள். நம் நாட்டில் எப்போதும் ஆன்மார்த்தமான கல்வியே சிறந்ததாகக் கருதப்படுகிறது. அதனாற்றான் அக்காலத்திலிருந்த வித்வான்களும் தெய்வீகத்தன்மை பொருந்தியவர்களா யிருந்தார்கள். கல்வி, ஒழுக்கம், ஈசுரபக்தி மூன்றும் மூவிலைச்சூலம்போலும், அக்கினிக்குள்ள சூடு, ஒளி, உருவம் என்ற முக்குணங்கள் போன்றும் பிரிவினையின்றியே மக்க

ளுக்கு ஊட்டப்பட்டு வந்தன. ஒரு நாட்டில் சிறுவர்கள் எவ்வழியில் பயிற்சி செய்யப்படுகிறார்களோ அதைப் பொருத்ததாகவே யிருக்கிறது. அந்நாட்டின் பிற்கால நிலைமை. சிறுவர்களுக்கு ஈசுர சிந்தனையைப் புகட்டாத கல்வியே கற்பிக்கப்பட்டால் போகப் போக அந்நாட்டார் நிரீச்சுரவாதிகளாகவும், "கண்டதே காட்சி கொண்டதே கோலம், இவ்வுலக போகங்களுக்கு மிஞ்சின போகம் வேறொன்றுமில்லை" என்ற கொள்கையையுடைய உலோகாயதர்களாகவும் மாறிவிடுவார்களென்பது திண்ணம்.

இப்போது நாம் சிறுவர்கள், பையன்கள், மாணவர்கள் என்று யாரைக் கருதுகிறோமோ அவர்களே' கொஞ்ச காலத்திற்குப் பின் நம் நாட்டின் க்ஷேமத்தைப் பாதுகாக்கும் வீரர்களாவார்கள். நாம் அடிமைத்தனம் நீங்கி, மற்ற நாட்டினர்போல் முன்னேற்றமடைந்து, செல்வமும் பலமும் பெற்று நம் பூர்வீகக் கௌரவ நிலைமையை யடைவது, நம்மக்களை நாம் இப்போது பயிற்சிசெய்யும் வழியைப் பொருத்ததாகவே யிருக்கிறது. ஆகையால் முக்கியமான இவ்விஷயத்தில் நாம் பூரண சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டியது நமது கடமையாயிருக்கிறது. இதுமட்டுமல்ல ; நாம் எச்சரிக்கையோடும் நடக்கவேண்டி யிருக்கிறது. எச்சரிக்கையேன் எனில் கூறுதும். ஒருவர் தாம் கோரிய காரியத்தைமட்டும் செய்வதாயின் சிரத்தைமட்டும் போதும். ஆனால் நாம் நம் காரியத்தில் ஜெயமடையலாகாதென்று ஒரு எதிரி பல விதத் தந்திரமான சூழ்ச்சிகள் செய்துகொண்டிருப்பதாயின், அப்போது சிரத்தையோடு எச்சரிக்கையும் இருந்தால்தான் எதிரியின் தந்திரவலையில் சிக்காமல், மயங்கிவிடாமல், காரிய சித்தி பெறலாகும்.

இப்போது நம் நாட்டில் சிறுவர்களுக்குச் சீர்திருத்தம் நிறைந்த உயர்தர வழியில் கல்வி கற்பிக்கப்படுவதாய் யாவராலும் கருதப்படுகிறது. அது சரியான மார்க்கந்தானா வென்பதும் எத்தகைய எண்ணத்தோடு அது செய்யப்படுகிறதென்பதும், அதனால் உண்டாகும் பலன்களாலேயே அறியப்படவேண்டும். மேல்நோக்கான தற்கால உணர்ச்சியால் அது விளங்காது. ஒரு விதை பார்வைக்கு அழகினமாகவும் விகாரமாகவும் தோன்றினும், அதை நட்டபின் அதிலிருந்துண்டாகும் விருட்சம் மிக்க ருசிகரமும் தேக சுகத்திற் கொத்ததுமான கனிகளை யளித்தால், அவ்விதை மிக்க

உயர்ந்தவிதையென்கிறோம். இரணவைத்தியன் நம்தேகத்திலுள்ள பிளவையை யறுத்துச் சிகிச்சை செய்யும்போது நமக்கு மிக்க பாதை யுண்டாயினும், பிறகு நமக்குச் சுகமுண்டாவதால் அவ்வைத்தியர் நமக்குச் சுகத்தை யுண்டாக்கவேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு செய்தார் என்று உணர்கிறோம்.

இப்போது நம்மக்கள் பயிற்சி செய்யப்படும் மாதிரியால் எத்தகைய பயன் விளைகிறதென்ற உண்மையைக் கவனிப்போம். முற்காலத்தில் கல்விகற்பதென்றால் பாஷைக்கல்வியும்,ஒழுக்கமும், பக்திஞானமும் உண்டாக்கும் கல்வியைக் கற்பதென்றே பொருள். இக்காலத்தில் பெற்றோர்கள் தம் மக்களைப் பாடசாலைக்கனுப்புவதோடு தங்கள் கடமை ஒழிந்தது என்று கருதுகிறார்களேயன்றி, மக்களின் ஒழுக்கம் ஆசாரம் நடக்கைகள் முதலியவைகளைச் சற்றும் கவனிப்பதேயில்லை. முற்காலத்தில் தந்தைமார்கள் தம் புத்திரர்களுக்குக் கல்விகற்பிக்கும் உபாத்தியாயர்களிடம் மிக்க அறிமுகமும் பழக்கமு முண்டாக்கிக்கொண் டிருப்பார்கள். இதனால் பிள்ளைகள் பாடசாலைக்கு வெளியிலும், தம் வீடுகளிலும் செய்யும் குற்றங்கள் உபாத்தியாயருக்கு எட்டிவிடும். அவர் மறுநாள் காலை பையன் பாடசாலைக்கு வந்ததும் "அடே! நீ இரவு வீட்டில் ஏன் பாடம் படிக்கவில்லை? உன் தாயாரிடம் ஏன் எதிர்த்துப் பேசினாய்?" என்று கண்டித்தும் தண்டித்தும் புத்தி புகட்டுவார்.

இக்காலத்திலோ பையன் பாடசாலைக்குச் செல்வதாய்ப் போய்வருவதுதான் தந்தைக்குத் தெரியும். பிறகு அவன் பரீட்சையில் சரியாய்ப் புள்ளி வாங்கிவிடவேண்டியது. அப்புள்ளிகள் சீட்டாட்டத்திற்கும், ஸிகாரெட் பிடிப்பதற்கும் வாங்கினாலும் சரி. பரீட்சையில் தேரிவிட்டால் பிள்ளை ஒரு துரைத்தன வேலையில் 15 ரூபாய் சம்பளத்தில் அமர்ந்துவிட்டாலும் போதும், இந்திரபதவி வந்ததுபோல்தான்.

இனி இவர்கள் கற்கும் இக்கல்வி நம்மக்கள் சீர்பெறுவதற்கும், தாய்நாடு முன்னேற்ற மடைவதற்கும் எவ்வளவுதூரம் அநுகூலமாக விருக்கிறது என்பதையும், இக்கல்வி என்ன நல்ல பலன்களையும் தீய பலன்களையு மளிக்கிற தென்பதையும் ஆராய்வோம்.

1. இப்போது நம் மக்கள் கற்கும் ஆங்கிலக்கல்வி பிற்காலத்தில் அவர்கள் துரைத்தனத்தாரிடம் சேவகம் செய்வதற்கு மட்டுமே, அதாவது அடிமைத் தொழில்செய்யவே உபயோகப்

படுகிறது. ஏனெனில் துரைத்தனம் நடைபெற அவசியமான வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய கல்விமட்டுமே பாடசாலைகளில் கற்பிக்கப்படுகிறது. கடவுளைப்பற்றிய கல்வியாவது, ஆன்மார்த்தக் கல்வியாவது, மக்களுக்கு தேசபக்தி, தன்மதிப்பு, வீரம், ஊக்கம் முதலியவற்றை யுண்டாக்கும் கல்வியாவது கொஞ்சமும் கிடையாது. பிள்ளைகளின் ஆசாரம், ஒழுக்கம், நடவடிக்கைகளைப்பற்றிக் கவனிப்பதே கிடையாது.

ஆகையால் கல்வி முடிந்தபின் மாணவர்கள் துரைத்தனத்தாரிடமோ, வர்த்தக சங்கத்தாரிடமோ அடிமைத் தொழிலில்போய் அமர்கிறார்கள். அபரிமிதமாய் அவ்வழியிலேயே அனேகர்போக முயல்வதால், பெரும்பாலர் வேலையகப்படாமல் திண்டாடுகிறார்கள். உயர்தரக் கல்வி கற்றவர்களில் பெரும்பாலார் பட்டதாரிகளானபின் (பி.ஏ., பி.யல்.) வக்கீல்களாய்விடுகிறார்கள். இவர்கள் நீதியை யெடுத்து நியாயாதிபதிக்குக் காட்டுகிறவர்கள் என்று நம்பப்படுகிறது. ஆனால் உண்மை யனுபவத்தில் இவர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகத் தொழில் செய்யவேண்டியவர்களாக விருக்கிறார்கள். இன்றேல் இவர்கள் ஜீவனம் நடைபெறுவது கஷ்டமாக முடியும். இவர்கள் தம் தம் கட்சியே (உண்மையாயினும் பொய்யாயினும்) நியாயமானதென்று வாதிப்பதால் நியாயாதிபதிக்கு நீதியை யெடுத்துக் காட்டி உதவி செய்வதற்கு மாறாய், அவருக்குக் குழப்பத்தை யுண்டாக்கிவிடுகிறார்களெனலாம்.

சிலர் பட்டதாரிகளானபின் ஆயுர்வேதப் பரீட்சையில் தேறி துரைத்தனத்தாரிடமோ, சுயாதீனத்தோடே தாமாகவோ வைத்தியத்தொழில் செய்கிறார்கள். இவர்கள் நம்முன்னோர் நெறிநின்று இத்தொழிலைச் செய்யின் இதனால் புண்ணியம் சம்பாதித்துக் கொள்ளலாம். இவ்வளவேதவிர நம்மவரில் படித்தவர்கள் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றைக் கனவிலும் நினைப்பதில்லை. இன்னும் அவற்றைக் கௌரவத் தாழ்வான தொழில்களாகவே கருதுகிறார்கள். நம் நாடு இத்தகைய தாழ்ந்த நிலைமையிலிருப்பதற்கு இஃதோர் முக்கிய காரணமாகும்.

இவர்கள் கற்கும் கல்வியாலடையும் பயன் இவ்வளவேயாக, கல்விகற்கும் முறைமையால் நம்மக்கள் அடையும் வேறுவிதப் பயன்கள் பலவுள. அவற்றையுற்றுணரும் ஒவ்வொருவர் மன

மும் வேதனையடையும் என்பதில் சற்றும் ஐயமின்றும். அந்தப் பயன்கள் எவை யென்று கூறுதும்.

1-வது. தம் முன்னோரின் நடையுடைபாவனைகளை யவமதித்துவிட்டு அன்னிய நாட்டாரின் ஆசாரங்களில் பழகத் தொடங்குகிறார்கள். குடுமியை வெட்டி யெறிந்து அரைமொட்டையாகி (கிராப்) ஷர்ட், கழுத்துப்பட்டை, மார் மூடாத மேல்சட்டை (ஒபன் கோட்) முதலியவை யணிந்து மேல்நாட்டார்போல் அரை வேடம் கால்வேடம் போட்டுக்கொள்கிறார்கள்.

2-வது. மூத்தோர் என்ற அச்சம் அடியோடு கிடையாது.

3-வது. பாடசாலைக்குப் போகும் வழியில், இரயில் அல்லது டிராம் வண்டியில் கூடப் புத்தக மூட்டையைக் கக்கத்திலோ பக்கத்திலோ வைத்துக்கொண்டு பகிரங்கமாய் பீடி, ஸிகரெட் பிடிக்கிறார்கள்.

4-வது. சற்று தூரத்திலிருந்து இரயில்வண்டியில் பாடசாலையிருக்குமிடத்திற்கு வரும் பிள்ளைகள் நான்குபேர் ஐந்துபேர் ஒரு கூட்டமாய்ச் சேர்ந்து, சீட்டாடிக்கொண்டே செல்கிறார்கள். பெரும்பாலான பிள்ளைகள் தினம் தங்கள் காலத்தின் ஓர் பாகத்தை யிந்த விளையாட்டில் செலவழிப்பது பிரத்தியட்ச அனுபவம். கல்வி கற்றாலும் கற்காவிடினும் சீட்டாடமட்டும் ஆரம்பத்திலேயே கற்றுக்கொள்ளுகிறார்கள்.

இம்மாதிரி தூரத்திலிருந்து இரயிலில் வரும் பிள்ளைகள் நிலைமை மிக்க துயரமானது. எப்படியெனில், இவர்கள் காலை 7-30 மணிக்கோ, 8 மணிக்கோ புறப்படவேண்டி யிருக்கிறது. மாலை பாடசாலை 4 மணிக்கு மூடப்பட்டாலும் இவர்கள் 5 மணிக்கு மேல் இரயிலேறிச் செல்லவேண்டும். மத்தியிலுள்ள காலத்தைக் கடைவீதிகளில் சுற்றுவது, பீடி பிடிப்பது, முதலிய வேலைகளில் கழிக்கிறார்கள். வீடு சேர்ந்தபின் கிரிகட் அல்லது சீட்டாட்டத்தில் பெரும்பாலர் காலங் கழிக்கின்றனர். பாடம் படிப்பது கடவுளுக்கே பிரீதி. பெற்றோர் சம்பளம் கொடுத்துப் புத்தகங்கள் வாங்கிக்கொடுத்து தினம் கட்டமுதும் கட்டிக் கொடுப்பதோடு தங்கள் கடனைக் கழித்து விடுகிறார்கள்.

முக்கியமாக இச்சென்னையிலுள்ள மாணவர்களில் பெரும்பாலாரின் நடக்கை இம்மாதிரித்தான் இருக்கிறது. நகரத்திலேயே வசிக்கும் மாணவர்கள் காபி கிளப்புகளுக்குச் செல்வதை

யும், பயாஸ்கோப், டிராமா, கடற்கரை முதலிய விடங்களில் காலங் கழிப்பதையும் பற்றி விரிக்கிற் பெருகும்.

5-வது. இவர்களுடைய பாட முறையில் தாய்ப்பாஷைக்குத் தகுந்த மதிப்பில்லை. ஆங்கிலமே நமக்கு அவசியமான பாஷை யென்றும் தாய்ப்பாஷை அவசியமல்லவென்றும் இவர்கள் கருது வதால் தாய்ப்பாஷையை மிக்க அலட்சியமாய்க் கருதுகிறார்கள். இவர்கள் படிக்கும் ஆங்கில நூல்கள் பெரும்பாலும் மேல்நாட்டா ரின் ஒழுக்கங்களைப்பற்றியும் அந்நாட்டின் சமாசாரங்களைப்பற்றி யுமே கூறுகின்றன. இவர்கள் கண்ணால் கண்டிராதவையும் இனி யும் காணமுடியாதவையுமான இடங்களையும் பொருள்களையும் பற்றியே யிவர்கள் வாசிக்கிறார்கள். தாய்ப்பாஷையில் ஏதோ ஒரு பாட புத்தகத்தை யலட்சியமாய்ப் படிக்கிறார்களாதலின் தாய்நாட்டின் பூர்வ நிலைமை, ஆசார ஒழுக்கங்கள், தம் முன்னோர் களின் பெருமை முதலியவை எவையும் இவர்கள் கற்றுணரச் சந் தர்ப்பம் வாய்ப்பதில்லை. பெற்றோரோ தம்மக்கள் இவற்றைக் கற்கவேண்டுமே என்பதைப்பற்றி சிந்திப்பதேயில்லை. இதனால் மேல்நாட்டு ஆசார ஒழுக்க வாசனையே பிள்ளைகளுக்கு அதிகமாய் ஏறுகிறது. தாய்நாட்டு ஆசாரம் முதலியவற்றில் அகௌரவ நோக்கம் உண்டாகிறது.

6-வது. பிள்ளைகளுக்கு உபாத்தியாயரிடத்தில் சற்றும் அச்சமென்பதே கிடையாது. குரு சீடன் என்ற முறைமையே யில்லை யெனலாம். பிள்ளைகள் 17-18-வது வயது வரும் வரையில் பெரும்பாலும் கல்வியினாலடையும் பயன் இன்னதென்று அவர்க ளுக்குத் தெரியாது. நாம் கல்விகற்றால்தான் பொருள் சம்பாதிக் கலாம், உலகபோகங்களை யனுபவிக்கலாம் என்ற உணர்ச்சியும் கிடையாது. அக்காலத்தில் அவர்கள் பெற்றோர்க்கும் உபாத்தி யாயருக்கும் பயந்துதான் பாடசாலைக்குச் செல்வதும் பாடம் படிப்பதுமே இயற்கை.

பிள்ளைகளுக்கு நடவடிக்கைப் படியவேண்டுவதும் இவ்விள வயதிலேயே. சிறுவர்கள் மனம் வெள்ளைக் கடிதம் போன்றது. வெள்ளைக்கடிதத்தில் எவ்விதச் சித்திரம் வரைகிறோமோ அது அவ்விதமே பதிந்துவிடும். இக்காலத்தில் பெற்றோர்களும் அதைப் பற்றி கவனிக்காமல் உபாத்தியாயரும் கவனிக்காமலிருந்துவிட் டால் அவர்கள் எக்கெதியாவார்கள். இத்தகையோரால் தாய்

நாடு என்ன சிறப்படையும்? பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் கையில் பிரம்புவைத்துக்கொண்டே யிருக்கலாகாது என்பது விதியாம். இப்படியிருந்தால் பிள்ளைகள் உபாத்தியாயரை அலட்சியம் செய்யக் கேட்கவும் வேண்டுமோ. இக்காலத்தில் உபாத்தியாயர்களில் அனேகர் மிக்க இள வயதுள்ளவர்களாக விருக்கிறார்கள். அவர்களுக்குச் சிறுவரை நடத்தும் முறை தெரியாது. அவர்களே இன்னும் அனேக விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாகவும், இன்னும் அடக்கம் ஒழுக்கம் அறியாதவர்களாகவு மிருக்கிறார்கள். 22-23 வயதிற்குள் ஒரு பரீட்சையில் தேறி உபாத்தியாயர் வேலைக்கும் பயிற்சியடைந்துவிட்டால் உபாத்தியாயராக வந்துவிடுகிறார்கள். பிள்ளைகளுக்கு இவர்களிடம் எப்படி அச்சம் பயம் உதிக்கும்? இக்கால உபாத்தியாயரோ பாடபுத்தகத்திலுள்ளதைக் குறித்த நேரத்திற்குள் பிள்ளைகளுக்குப் போதிப்பதோடு தம் உபாத்திமைத் தொழிலின் கடமை தீர்ந்துவிட்டதெனக் கருதுகிறார்கள்.

தமிழ் உபாத்தியாயர்களில்தான் பெரும்பாலோர் வயது முதிர்ந்தவர்களாகவும், பல நூல்களைக் கற்ற பண்டிதர்களாகவும், உலக அனுபவமும், (சிலர்) ஆன்மார்த்தக்கல்வியு முடையவர்களாகவும் இருக்கிறார்கள். இத்தகையோரே உபாத்தியாயர், ஆசிரியர், குரு என்ற பதவிக்குரியவர்கள். இவர்களிடமோ பிள்ளைகளுக்கு அச்சமே கிடையாது. ஏனெனில் தாய்ப்பாஷைக் கல்வி தாழ்ந்த நிலைமையிலிருப்பதால் நமது மக்களுக்கு ஆங்கிலத்திலிருக்கும் அக்கரையும் மதிப்பும் தாய்ப்பாஷையிலில்லை. ஆகவே அதன் உபாத்தியாயரிடமும் அவ்வாறே யிருக்கிறது.

இவ்வாறு பயிற்சியடைவதால் இவர்கள் கல்வி முடிந்து தொழில் செய்யும்போதும், ஒரு விடத்தில் தொழில் செய்வோர் ஒரு சங்கமாய்ச் சேர்ந்து பந்தடிப்பதும், அல்லது நாடகம் கற்றுக்கொண்டு ஆடுவதுமாகிய காரியங்களைச் செய்கிறார்கள். மேல் நாட்டாரிடமிருந்து நமக்குச் சீர்கேட்டை யுண்டாக்கும் விஷயங்களை யெல்லாம் கற்றுக்கொள்வதில் மிகச் சுறுசுறுப்பாக விருக்கிறார்கள். இப்போது சிலர் மீசையில் அரையே அரைக்கால் பாகத்தை யெடுத்துவிட்டு காலேயரைக்கால் மீசை வைத்துக்கொள்கிறார்கள். ஒரு வெள்ளையன் ஒரு பக்கம் காதை யறுத்துவிட்டு வரக்கண்டால் இவர்கள் அதுவும் நாகரீகச் சீர்திருத்தமென்றெண்

ணித் தாங்களும் அவ்வாறே யறுத்துக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. ஐயோ! இவர்கள் மதி யென்ன மதியோ? துன்மதி, அவமதி என்றே கொள்ளலாகும்.

நம் மக்களின் தற்கால நிலைமை பரிதாபம், மிகப் பரிதாபமே. இவர்களை இத்தீய நெறியிலேயே செல்ல விட்டுவிட்டு நாம் வேறு என்ன விஷயங்களைச் செய்தாலும் பயனில்லை. சீக்கிரத்தில் நாம் ஒரு ஜாதியார் என்ற நிலைமையே அடியோடு போய் விடும். தெய்வசிந்தனை யடியோடுபோய் மிருகத்தன்மை மிகுந்து விடும். நம் தாய்நாடு அந்த நிலையை யடைவதைவிட நம்மையும் நம் நாட்டையும் அகன்ற அலைகடல் கொண்டுபோவது நலம். நம் நாட்டிற்குப் பெருந் தீங்கை விளைவிக்கக்கூடிய இக்குறை யெப்படி நீங்குவது? பெற்றோரும், கல்வியிலாகாவில் சம்பந்தப்பட்டுள்ள நம்மவர்களும் கவலைகொண்டு தக்க முயற்சி யெடுத்துக் கொண்டால்தான் நம் மக்கள் சீர்பட்டுத் தாய்நாடு அழியாது நிற்கும். எல்லாம் வல்ல பரம்பொருளே யவர்கள் மனதைத் திருப்பவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

ஓம்தத்ஸத்.

நமது வருட முடிவு.

இச்சஞ்சிகையோடு ஆனந்தனது 9-ம் ஆண்டு நிறைவுறுகிறது. 15-6-1924-க்குள் 10-ம் வருட சந்தாவை யனுப்புமாறு கடந்த இரண்டு சஞ்சிகைகளிலும் அறிவித்திருந்தோம். அவற்றிற் கூறியபடியே அத்தேதிக்குள் சந்தாத்தொகையை யனுப்பாமலும், அடுத்த வருடம் சஞ்சிகையை நிறுத்தும்படிக்குத் தெரிவிக்காமலும் உள்ளவர்களுக்கெல்லாம் வி.பி. மூலமாகச் சஞ்சிகையை யனுப்புகிறோம்.

“போதுமானபேர் முன்பணமனுப்பி, சந்தாதாரர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தாதாரரையேனும் சிபாரிசு செய்தால் இச்சந்தாதொகைக்கே சஞ்சிகையில் இன்னும் பக்கங்கள் சேர்த்து வெளியிடுவோம்” என்றும் வரைந்திருக்கிறோம். சந்தாதாரர்கள் இவ்விஷயங்களில் திருப்தியாக ஊக்கங்காட்டினால் நாம் வாக்களித்தபடி செய்யத் தடையிராது. இவ்வளவேயன்றி இதற்காக அதிக சந்தா அனுப்பும்படி நாம கேட்கவில்லை. அப்படியிருக்க இரண்டொருவர் எட்டணா அதிகமாக அனுப்பியிருக்கிறார்கள். அத்தொகை அவர்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது.

சந்தாதாரர்களின் ஆதரவையன்றி ஆனந்தனுக்குப் போஷகர் கொடையாளர் முதலிய வேறு எவ்வித உதவியும் இல்லையென்பது யாவருமறிந்தவிஷயம். நம்மவர்க்குத் தாய்ப்பாஷையில் அன்பும், அபிமானமும்

உண்டாகிறவரையில் நம் தாய்நாடு முன்னேற்றமடையாதென்பதுண்மை. இவ்விஷயங்களைச் சந்தாநேயர்கள் மனதில்வைத்து ஆனந்தனிடம் அன்பு செலுத்தக் கோருகிறோம். சச்சிதானந்தப் பரம்பொருள் நம் நேயர்களுக்குப் பூரண அருள் புரியவேண்டுமாய் மனதாரப் பிரார்த்திக்கிறோம்.

பத்திராதிபர்.

நாலடியார் வசனம்.

(415-ம் பக்கத் தொடர்ச்சி.)

3-ம் அதிகாரம் - யாக்கை நிலையாமை.

மலையின்மேல் உதயமாகும் பூரணச் சந்திரன்போல, யானையின் தலையின்மேல் கவிந்திருக்கும்படியான (சந்திரவட்டக்) குடையையுடைய மஹாராஜாக்களும் (முடிவில்) இப் பூமியில் மாண்டுபோனார்கள் என்று கூறப்பட்டார்களேயல்லாமல், உயிரோடிருந்தவர்கள் இவ்வுலகத்தில் ஒருவருமில்லை. (1)

(நமது) வாழ்நாளை யளப்பதற்கு அளவு கருவியாக இருக்கின்ற கிரணங்களையுடைய சூரியன், ஒருநாளும் தவறாமல் உதயமாய்க்கொண்டேயிருப்பதால், அவ்வாயுட்காலம் முடிவடையுமுன் தருமத்தைச் செய்யுங்கள். தம் வாழ்நாளைக் கடந்து இப்பூமியில் யாரும் ஜீவித்திருக்கமாட்டார்கள். (2)

"சபை முழுதும் சப்திக்கும்படி விவாகத்திற்காக ஏற்படுத்திய வாத்தியங்கள் அன்றையதினமே அவ்விடத்திலேயே அதே மாப்பிள்ளைக்கு சாவுக்குக் கொட்டும் பறையாய் முழங்கவுங்கூடும்" என்று நினைத்து பெரியோர்களுடைய மனமானது துறவற மார்க்கத்திலேயே உறுதியாக நிற்கும். (3)

ஒருவன் இறந்தவுடனே பறை கொட்டுவோர் அங்குப் போய் (முதன் முதலாக) ஒரு முறை பறையைக் கொட்டுவார்கள். (பிறகு) சிறிதுநேரம் சும்மா இருந்து (இரண்டாம் முறையாக) மறுபடியும் அடிப்பார்கள். மூன்றும்முறை அடிக்கும்பொழுது அச்செத்தவனை இனிமேல் சாகப்போகிறவர்கள் (பாடையில் வைத்துத்) துணிகொண்டு மூடி கொள்ளிச்சட்டியைக் கையிற்கொண்டு (தோள்களில் வைத்துச்) சுமந்து (சுடுகாட்டிற்குக் கொண்டுபோகப்) புறப்பட்டு விடுவார்கள். (இத்தன்மையான இவ்வுலக இயற்கையை ஓ மனிதனே!) நன்றாகக் கவனித்துப்பார். (4)

பந்துக்களெல்லோரும் 'கலீல்' என்று மிக்க சத்தமிட்டுப் புலம்ப, யாவரும் கூட்டமாகக் கூடிக்கொண்டு சவத்தைத் தூக்கிக்கொண்டு போய்ச சுடுகாட்டில் வைப்பதைக் கண்டிருந்தும் விவாகத்தைச் செய்து கொண்டு இவ்வுலகத்தில் 'இன்பமுண்டு' 'இன்பம் உண்டு' 'இன்பம் உண்டு' எனக் கருதும் அறிவீனனுக்கு 'தொண் தொண் தொண்' என்று

அடிக்கப்படும் (பிணப்) பறையே (இன்பத்தை யனுபவிப்பதற்கிடமான சரீரம் நிலையற்றதென்பதைத்) தெரிவிக்கும். (5)

தோல்பைபோன்ற உடம்பிலிருந்துகொண்டு வினைகளை மிகுதியாகச் செய்து அவற்றின் பலனை அனுபவிக்கப்பண்ணும் உயிராகிய கூத்தாடி, உடம்பினின்றும் வெளிப்பட்டுவிட்டால் (அவ்வுடலைக்) கயிற்றாற்கட்டி இழுத்துக்கொண்டு போனாலென்ன? நன்றாகச் சுத்தஞ்செய்து அடக்கஞ் செய்தாலென்ன? கண்ட கண்ட இடத்தில் போட்டுவிட்டாலென்ன? பலரும் பார்த்துப் பழித்தால் என்ன? எப்படிச் செய்தாலும் பயனில்லை.()

பெய்கின்ற மழைநீரில் தோன்றும்படியான குமிழிபோலப் பலமுறையும் தோன்றி யழியுந் தன்மையுடையது இச்சரீரமென்று நினைத்து, 'பிறவித் துன்பத்தை நீக்கவேண்டும்' என்றறியும் உறுதியான விவேகிகளை ஒப்பானவர் இவ்வுலகில் யாவர்? (ஒருவருமில்லை.) (7)

உயிரானது, மலையின்மேல் அசைந்துகொண்டிருக்கிற மேகம்போலக் காணப்பட்டு, உடனே நிலைபெறாமல் நீங்கிப்போகும். ஆதலால் சரீரத்தைப் பலமுடையதாகப் பெற்றுள்ளவர்கள், தாங்கள் பெற்ற அவ்வுடலால் ஆகவேண்டிய பிரயோஜனத்தை விரைவில் அடைந்துகொள்ள வேண்டும். (8)

(ஐயோ பாவம்! அவன்) 'இப்பொழுதுதான் இங்கு நின்றிருந்தான். இப்பொழுதுதான் இங்கு உட்கார்ந்திருந்தான். இப்பொழுது படுத்திருந்தான், (இதற்குள்) தன் சுற்றத்தார்கள் கதறிப் புலம்பும்படி இறந்துபோனான்' என்று ஊரார் சொல்வதை அடிக்கடி கேட்கிறோமாகையால், சரீரமானது புல்லின் நுனியில் தங்கியுள்ள பனித்துளிபோல நிலையற்றதென்று நினைத்து இப்பொழுதே தருமத்தைச் செய்யுங்கள். (9)

மனிதர்கள் கேளாமலே வந்து உறவினர்களாக வீட்டில் பிறந்து, 'மரத்தில் (தன் காரியமானவுடனே) கூட்டைச் சும்மா விட்டுவிட்டுத் தூரத்தில் பறந்துபோய்விடுகின்ற பறவையைப்போல்' சரீரத்தைப் பந்துக்களிடத்தில் வைத்துவிட்டுச் சொல்லாமல் இறந்துபோவார்கள். (10)

4-ம் அதிகாரம் - அறன் வலியுறுத்தல்.

(தருமத்தின் சிறப்பைக் கூறுதல்.)

முற்பிறப்பில் (தருமமாகிய) தவத்தைச் செய்யாதவர்கள், இப்பிறப்பில் வறியர்களாய் பிச்சையின்பொருட்டு வீடுகள்தோறும் சென்று, 'இவ் வீட்டில் வசிப்பவர்களை நல்ல வாழ்க்கையுடையவர்கள்' என்று (தலை நிமிர்ந்து ஏக்கங்கொண்டு பார்த்து) உள்ளே நுழைய முடியாமல் வாயிற்படியைப் பிடித்துக்கொண்டு மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு நிற்பார்கள்.()

(நாம் மேலும் மேலும்) செல்வமுடையவர்களாக வேண்டுமென்று செல்வத்தை விரும்பி, தருமத்தை மறந்துவிட்டு, நாம் இறந்துபோவோமென்பதைச் சிறிதும் ஒப்பாத ஓ அற்ப மனமே! நீ இடைவிடாமல் பணம்

சம்பாதிக்கப் பலவாறு முயற்சிசெய்து வாழ்ந்தாலும், உன் வாழ்நாள் கழிந்துபோய்விட்டன. இனி நீ செய்வதென்ன சொல்? (2)

முற்பிறப்பில் செய்த தீவினைப்பயன் அனுபவிக்க வந்து நேர்ந்தால், அறிவில்லாதவன் அதற்காகக் கடுமையாகப் பெருமூச்செறிந்து மனத்தினால் நினைத்து வருந்துவான். அத்தீவினையின் பலனை ஆராய்ந்து அது முற்பிறப்பின் தீவினையால் வந்ததென்று அறிகின்றவர்களே சம்சார துக்கத்தின் எல்லையைவிட்டு நீங்குவார்கள். (3)

பெறுதற்கரிய உடலையடைந்த பயனால் பெரிய தருமப் பயனையும் மிகுதியாகவே அடைந்துகொள்ளுங்கள். அத்தருமமானது கரும்பானது தன்னைப் பக்குவமாக ஆலையிலிட்டு ஆட்டினவர்களுக்குத் தன்னிடத்திலுள்ள சாற்றைத் தருவதுபோல, மறுமையில் மிகுந்த பயனைத் தரும். உடம்பு அக்கரும்பின் சக்கைபோல் அழிந்துபோகும். (4)

கரும்பை, அது பதன் கெடுதற்கு முன்பே ஆலையிலிட்டாட்டி, அதன் பயனாகிய வெல்லத்தை யடைந்தவர்கள், அக்கரும்பின் சக்கை அவ்விடத்தில் நெருப்பில் எரியும்பொழுது துக்கப்படமாட்டார்கள். அதுபோல உடம்பினாலடையவேண்டிய பயனாகிய தருமத்தைப் பிரயாசைப்பட்டு அடைந்தவர்கள் எமன் வருங்காலத்தில் வருந்தமாட்டார்கள். (5)

எமன் நம்மைப் பிடிக்கவருங் காலம் இன்றைக்கோ? நாளைக்கோ? வேறு என்றைக்கோ? என்று சந்தேகிக்காமல் எமன் பின்னாலேயே நிற்கிறானென்றெண்ணிப் பாப காரியங்களைச் செய்யாமல் ஒழியுங்கள். பெருமைபொருந்திய முனிவர் முதலான பெரியோர்கள் சொல்லிய தருமகாரியங்களைக் கூடியவரையில் செய்யுங்கள். (6)

மனிதர்களால் அடையப்படவேண்டிய பெரும் பயனும் ஆராயுமிடத்து மிகப் பலவாகையினால், நீங்கள் முற்பிறப்பிலியற்றிய நல்வினையின் பயனாகக் கிடைத்த உடலுக்கு உபயோகப்படும் காரியங்களைச் செய்துகொண்டிராமல், மறுமையில் சுவர்க்கலோகத்தி லிருந்துகொண்டு பேரின்பத்தை யனுபவிக்கச் சிறந்த தருமங்களையே செய்யவேண்டும். (7)

நகத்தால் கிள்ளி யெடுக்குமளவுள்ள மிகச் சிறிய ஆலம்விதையானது வளர்ந்து மிகுதியாக நிழலைக் கொடுப்பதுபோல, தருமத்தின் பயனும் தான் மிகச் சிறிதாயிருந்தாலும், தகுந்த பெரியோர்கள் கையிற் பட்டால் மிகப் பெரிய ஆகாயமும் சிறியதென்னும்படி மேலான பயனைப் பரப்பிவிடும். (8)

தினந்தோறும் பொழுது கழிந்துகொண்டிருப்பதைத் தமது ஆயுள் நாள்களில் கழிந்து போகிறதாகச் செல்லுவைத்து, நாள் கழிதலின் உண்மைநிலையை யறியாதவர்கள், தினந்தோறும் நாள் கழிந்துகொண்டிருப்பதைக் கண்டும் அதை யறியாமல் தினந்தோறும் நான் இப்படியே யிருக்குமென்றெண்ணி யின்பமடைவார்கள். (9)

மிக்க இழிவான தொழில்களைச் செய்து உணவு முதலியவற்றைக் கொடுத்து வளர்த்தால், அப்பொழுதேனும் இவ்வுடல் வெகுகாலம் நிலை பெற்றிருக்குமானால் நான் மானமென்னும் அருமையான ஆபரணத்தை நீக்கி, யாசகம் முதலாகிய மிக்க இழிவைத் தரும்படியான தொழில்களால் ஜீவிப்பேன். (அப்படி யில்லாமையால் இங்ஙிலையில்லா உடம்பிற்காக மானத்தை விட்டு இழிதொழில் செய்து ஜீவிப்பதால் யாது பயன்?) (10)

(தொடரும்.)

பூ. ஸ்ரீனிவாசன், தமிழ்ப்பண்டிதர்,
இராணிப்பேட்டை.

"யாத்திரைவாசிகளுக்கு ஓர் சற்புத்தி."

(ஓர் கடிதம்)

ஐயா, நான் சென்ற மாதத்தில் என் குடும்பத்தினரோடு இராமேஸ்வரம் முதலிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்துவரப் போய்விட்டு எனது சொந்த ஊருக்குத் திரும்புங்கால் வழியிலுள்ள உசிலம்பட்டி என்ற ஊரில் என் பந்துக்கள் வீட்டில் தங்கிவரும்படி நேரிட்டது. ஷை வீட்டின் ஆடவர் கொஞ்ச காலத்துக்கு முன்பு காலஞ்சென்றுவிட்ட படியால் ஷையாரின் மனைவியும் சிறு குழந்தைகளுமே யிருந்தனர்கள். ஷை குழந்தைகளில் 12 வயதுள்ள பெண்ணே மூத்ததாயிருந்தது. அந்தப் பெண்ணுக்குக் கல்வி கற்பிப்பதற்காக அந்தப் பெண்ணினுடைய தாயார் ஒரு கிருஸ்தவப் பெண்பிள்ளையைக் (பைபில் உமன்) கொண்டு கற்பிக்கும்படி ஏற்பாடு செய்திருந்தாள். அந்தக் கிருஸ்தவப்பெண் தினம் 2 மணி நேரம் வீட்டிற்கு வந்து பாடம் சொல்லிக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வீட்டில் தங்கும்படி நேரிட்ட நான் அங்கு மேஜையின் மேல் வைக்கப்பட்டிருந்த இரண்டு புஸ்தகங்களைப் பார்த்துவிட்டேன். ஷை புஸ்தகங்களிலொன்று யோவானின் சுவிசேஷம், மற்றொன்று யாத்திரைவாசிகளுக்கு ஓர் சற்புத்தி என்ற புத்தகம். அதைப் பார்த்தவுடன் நாமும் ஒரு யாத்திரைவாசிதானே. இதைப்பார்த்து பயனடையலாம் என்று முழுதும் வாசிக்கத் தொடங்கினேன். அது பயனற்றதா யிருந்ததோடு ஹிந்துமத தேவாலய தூஷணைகள் நிரம்பியிருக்கக் கண்டு வருத்தமுமடைந்தேன். என் பந்துவான அந்தம்மாளை யழைத்துக் கேட்டதில் தனது பெண்குழந்தை படிப்பிற்காக போதிக்கும் கிருஸ்தவ உபாத்தியாயினியால் இனமாக இவ்விரு புத்தகங்களும் கொடுக்கப்பட்டன எனத் தெரிந்தது. இந்தப் பைபில் உமென்களின் கொடுமைகளைப் பன்முறையும் நமது ஆனந்தனில் கேட்டு அறிந்தவளாதலால் அந்தம்மாளுக்கு அதனால் உண்டாகும் கெடுதியை எடுத்துச் சொன்னதின்மேல் அப்புஸ்தகங்களிரண்டும் நிராகரித்து தள்ளப்பட்டு இதுமுதல் கிருஸ்தவ உபாத்தியாயனிகளிடம் பாடம் கற்க விடுவதில்லை யென்று தீர்மானம் செய்துகொண்டாள். நான் அவ்விரு புஸ்தகங்களையும் எடுத்துக்கொண்டு என் பிரயாணத்தை

ஆரம்பித்தேன். அப்புஸ்தகங்களில் "யாத்திரை வாசிகளுக்கு ஓர் சற்புத்தி" என்ற புஸ்தகத்தைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன். அப்புஸ்தகத்தின் கூற்றுகளுக்குத் தகுந்த பதிலை நமது ஆனந்தன் வெளிப்படுத்துவான் என எண்ணுகிறேன்.

V. M. மாரிச்சாமி பிள்ளை, வீரபாண்டி.

குறிப்பு:—நமது நண்பர் வரைந்துள்ள கடிதத்தில் குறிக்கப்பட்ட சிறு புத்தகத்தைப் பார்வையிட்டோம். அதை முழுமையும் இங்கு வெளியிடுவது அனுவசியம். அதிலுள்ள விஷயம் எத்தகையதென்பதைத் தெரிவிக்கச் சில வாக்கியங்களை மட்டும் ஈண்டு குறிப்பிடுகிறோம். நம்மவர் எத்தனைமுறை யெச்சரிக்கை பெறினும் இன்னும் ஜாக்கிரதை யடையாமலேயிருக்கிறார்கள். அதனாற்றான் மறுபடி மறுபடி இத்தகைய விஷயத்தைப் பற்றி வரையவேண்டி நேர்கிறது.

இக்காலத்தில் விளம்பரம் செய்வோர் எடுத்ததே உண்மை விஷயத்தை வெளியிட்டால் பெரும்பாலார் வாசிக்கமாட்டார்களென்று கருதி, காண்போரை மயக்கத்தக்க "தலைப்பெயர்" கொடுத்து பிறகு மெதுவாக விஷயத்தை வெளியிடுவது வழக்கமாயிருக்கிறது. "ஓ பெரிய அதிசயம்" என்று தலையங்கமிட்ட விஷயத்தை எவரும் வாசிக்கத் தொடங்குவார்களன்றோ. பிறகு வாசித்தால் "ஒருவன் ஒரு வருடமாய்ச் சூலைநோயால் வருந்தி எல்லா வைத்தியர்களாலும் கைவிடப்பட்டான். கடைசியில் நமது "சூலைச் சங்காரி" என்ற ஔடதத்தைச் சாப்பிட்டு சுகமடைந்தான். இதற்கிணையான மருந்து உலகிலில்லை. விலை டப்பி 1-க்கு ரூபா 5-0-0' என்ற கருத்தடங்கிய விஷயமே யிருக்கும்.

மேலே குறித்த புத்தகத்தின் பெயரும் அவ்வாறே இருக்கிறது. பார்வைக்கு ஸ்தலயாத்திரையைக் குறித்த விதிகளடங்கிய நூலாக்கும் என்றே எவரும் கருதுவர். உள்ளே யிருப்பது நமது மதத்தைப்பற்றிய தூஷணையே. இப்புத்தகத்தில் ஸ்தலங்கள், தீர்த்தங்கள், மூர்த்திகளின் தூஷணையே யடங்கியிருக்கிறது. இதிலடங்கிய சில ஆபாச வாக்கியங்கள் பின் வருமாறு:—

"செக்குலக்கையை விழுங்கி சுக்குக் கஷாயம் சாப்பிடுவோர் போலப் பாவபாரம் தொலைய மதுரை முதலிய ஸ்தலங்களுக்குச் செல்லுகிறீர், வைகை முதலிய நதிகளில் ஸ்நானம் செய்கிறீர்கள். சொக்கர் உங்கள் பாவத்துக்காகவா மண் சுமந்தார், பிரம்படிபட்டார்? இவர் பேர்கொண்ட சிலையைத் தரிசிப்பதால் பாவத்தைப்பற்றி என்ன உணர்வுண்டாகும்.

* * * * * *

பெரியதோர் தேர்மீது இந்நாளளவும் தியாகராஜர் ஏறிவரும் நோக்கமென்ன? உங்கள் பாவம் பெரிதென்றுணர்த்தற் பொருட்டோ? அல்லது "உலகத்தில் என்னைப்போல எத்தனையோ தேவர்களை எத்தனையோ தலங்களில் வைத்து வணங்குகிறீர்களே; எனக்கு இருப்பதுபோல் இத்தனை

பெரிய தேரும் அழகிற் சிறந்த தாசிகளும் யாருக்குண்டென்று தமது பெருமையைக் காண்பிக்கும்பொருட்டோ இத்தேரில் சவாரி வருகிறார்."

சிதம்பரத்தையும் மிகவும் மதிக்கிறீர்கள். இங்கே சிதம்பர இரகசியம் இருக்கிறதென்கிறீர்கள். இந்த இரகசியம் என்ன? அதை அறிந்தவன் யார்? அறிவிப்பவன் யார்? இந்தக் கோவிலில் அருச்சனைக்காகத் தேங்காய், பழம், கற்பூரம் முதலியவைகளைக் கொண்டுபோனாலும் தக்ஷிணை கொடுக்கக் காசு இல்லை என்றால் எல்லாவற்றையும் கையிற் கொடுத்தனுப்பி விடுவார்கள்.

இந்த ஸ்தலத்தில் நடராஜர் காலைத்தூக்கி யாடியது உங்கள் பாவ நிவாரணத்துக்கோ? காளியை வென்ற தமது திறமையைக் காட்டவோ? சற்று யோசியுங்கள். மனுக் கோடிகளின் பாவந்தீரத் தில்லை நடராஜர் செய்ததாவது செய்கிறதாவது ஒன்றுண்டானால் தயை கூர்ந்து எனக்குச் சொல்லுங்கள்.

இராமர் நாட்டைவிட்டுக் காட்டுக்குப்போனதும், அனுமானைத் தோழனாகக்கொண்டதும், இராவணசங்காரம் செய்ததும், எதற்காக? பாவிகளை இரக்ஷிக்கவா? சிந்தியுங்கள்!

கிருஷ்ணன் லீலா விநோதம் செய்ததும், பாண்டவருக்குச் சகாயரானதும், அர்ச்சுனனுக்குச் சாரதியானதும் மனுஷஜாதியை மீட்டேற்றும் பொருட்டுச் செய்த செயல்களா? ஆதலால் இவர்களாலெல்லாம் உங்கள் பாவம் நீங்கிப் பரிசுத்தமாகித் தேவதரிசனம் உங்களுக்கு மெய்யாய்க் கிட்டுமென்று நம்பி இலவுகாத்த கிளியாகாதிருங்கள்.

மனிதன் தேவதரிசனம் பெறத் தடையாய் நின்ற பாவமாகிய பெருங் குற்றத்தைப் பாவமற்ற அவர் (ஏசு) தாம் பட்ட பாடுகளால் குலைத்து, தேவ தரிசனைக்கு அவசியமாகிய பரிசுத்தத்தைத் தமது மாசற்ற தூய ஜீவியத்தால் சம்பாதித்தார். பாவமற்ற இவர் நமது பாவங்களுக்காகப் பதிலாளியானதால் பாவிபோல் மரித்து, தமது பரிசுத்த தேவபெலத்தால் மரணத்தை மேற்கொண்டு உயிரோடெழுந்து சதாகித்தியமாய்ப் பிழைத்திருக்கிறார்.

* * * * * *

இத்தகைய ஆபாசங்களே அப்புத்தகத்தி லடங்கியிருக்கின்றன. நண்பர்களே! ஹிந்துக்கள் இத்தகைய புத்தகங்களை வாசிப்பதால் மனவெரிச்சல் உண்டாவது இயற்கை. ஆகையால் இவர்களால் வெளியிடப்பட்ட நூல் என்றறிந்ததே யதை எட்ட எறிந்துவிடுவதுதான் உத்தமர்கள் செய்கையாகும். ஏனெனில், இவர்கள் துண்டுப் பிரசுரங்களிலெல்லாம் நம் மத தூஷணை யிருக்குமன்றி அவர்கள் மதத்தைப்பற்றிய அரிய விஷயம் ஒன்று மிராது. அப்படிக் கூறவும் அதில் ஒன்றுமில்லை. நடராஜர் நடனம் செய்வதும் உற்சவாதிகள் நடத்துவதும், சரியையாதிகளும் ஆகிய இவற்றிலுள்ள நுண்ணிய இரகசியப் பொருள்களும் தத்துவார்த்தங்களும் இவர்களுக்கென்னதெரியும்? மாலைக்கண்ணனுக்கு எல்லாம் மஞ்சளாகத்தான் தோன்றும்.

இவர்கள் "மனிதன் பாவி. பாவமூட்டையோடு தோன்றியவன்" என்ற கொள்கையுடையவர்கள். இவர்கள் மதப்படி முன்பின் ஜன்மமில்லாத போது மனிதன் பாவியானது எப்படியோ தெரியவில்லை. இப்படி முன் பின் முரணான விஷயங்கள் இவர்கள் நூலில் ஏராளமாகவுண்டு. மனிதன் பாவி யென்றும் இவன் பாவத்திற்காக கடவுளின் ஏகபுத்திரனான ஏசு இரத்தம் சிந்தி யாவர் பாவத்தையும் ஏற்றுக்கொண்டாராதலால் அவரை வணங்கி அம்மதத்தில் சேர்ந்தால்தான் மோக்ஷமுண்டு, வேறு எந்த மார்க் கத்திலும் மோக்ஷமில்லை என்பதுதான் இவர்கள் சித்தாந்தத்தின் முடிவு.

நண்பர்களே! நமது வேதத்தில் கூறியுள்ளபடியும், அனாதிகாலந் தொட்டு நம் முன்னோர்களாகிய மகான்கள் அனுபவமாகக் கண்டறிந்த படியும், மனிதன் பாபியல்ல. ஆன்மா, கடவுளைப்போல் ஆனந்த சொரூ பமுடையது. சச்சிதானந்த மயமானது. நாம் முன் சன்மத்தில் செய்த கன்மங்களையன்றி அபாரமான பாப மூட்டை வேறு எதுவுமில்லை. நமது பாபத்திற்காக வேறு எவரும் கழுவில் அறையப்பட்டு மரிக்கவேண்டிய அவசியமில்லை. கடவுள் சர்வ வல்லவர். அவர் நமது பாபத்திற்காகத் தமது புத்திரனைப் பலிகொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட ஒரு கார ணமுமில்லை. நாம் அவரிடம் அன்புபூண்டொழுகினால் அவர் நமக்குள் ளாகவிருந்தே நமது கர்மங்கள் யாவும் நசிக்கச்செய்வார். அக்கர்மங்க ளைப் போக்கிக்கொள்ளும் மார்க்கம் நம்மிடமேயிருக்கிறது. நாம் அவரிடம் பூரண பக்திவைத்து நிஷ்காம கர்மத்தைச் செய்தால் நமது கர்மங்கள் தாமேயழியும். அதற்காக ஒருவரையும் இரத்தம் சிந்தி மரிக்கச் செய்யும் பெரும் பாதகத் தொழில் நமக்கு அவசியமில்லை.

பைபில் உமன் என்ற மாதர்கள் சம்பளமில்லாமலே வீட்டிற்கு வந்து நமது பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதாகக் கூறினால், அதினாலேயே நம் மவர் மயங்கிவிடுகிறார்கள். அவர்கள் ஏன் அப்படிக் காசில்லாமல் வேலை செய்யவேண்டும்? பாதிரிகள் அவர்களுக்கு ஏன் சம்பள மளிக்கவேண் டும். நமது பெண்கள் கல்வி கற்கவேண்டுமென்ற அவாவாலோ? ஒரு காலுமில்லை. அவர்கள் நோக்கம் முழுமையும் நம் பெண்களுக்கு இரக சியமாகப் போதித்து மயக்கித் தங்கள் மதத்திற்கு அவர்களை யிழுத்துக் கொள்ளவேண்டுமென்பதே. அதுவே தமகன் நோக்கமென்று பாதிரி களே வெளிப்படையாகவும் கூறுகிறார்கள். நமது மதாசாரங்களைப் போதி க்கும் நூல்களைக் கொடுத்து அவற்றையே நமது பெண்களுக்குப் போதி க்கும்படி கூறிப் பெற்றோர் கிட்டவிருந்து பார்த்துக்கொண்டிருக்கட்டும். பிறகு அம்மாதர்கள் பாடம் கற்பிக்க வருகிறார்களா வென்று பாருங்கள். தங்கள் சபம் பலிக்காதென்று தெரிந்தால் அங்கு எட்டியே பார்க்கமாட் டார்கள். இனியேனும் எச்சரிக்கையடைந்து அவர்களை நம் பெண்மணி களுக்குக் கல்வி கற்பிக்கும்படி விடாதீர்கள். ஏமாந்துபோய் பெண்களை உயிரோடிழந்து பின்னால் பரிதவிப்பதில் பயனில்லை.

பத்திரிகாசிரியர்.

ஆரிய சித்தாந்தம்.*

(தெய்வம்—பக்தியோகம்.)

(428-ம் பக்கத் தொடர்ச்சி.)

வீட்டுக்குப் போனவுடன் பிராமணனுக்கு ஒரு பீடமிட்டு உட்கார வைத்துவிட்டுச் சற்றுச் சிரமபரிகாரம் செய்துகொள்ளுங்கள், நான் சீக்கிரமாய் வருகிறேனென்று சொல்லி மனைக்குட் புகுந்தார். அங்கே ஒரு அறையில் அவருடைய மாதாபிதாக்களிருந்தார்கள். வயது முதிர்ச்சியினால் நடக்கவும் சக்தியற்றவர்களா யிருந்தார்கள். அவர்களிடம் சென்று முறைப்படி அவர்களுக்கு வணங்கிப் பிறகு ஸ்நானம் செய்வித்து, நல்ல சுத்தியான வஸ்திரந் தரிப்பித்து, உபசாரத்துடன் அடிசிலூட்டி மறுபடியும் அவர்களைக் கட்டிலில் படுக்க வைத்துவிட்டுப் பக்கத்தில் நின்றுகொண்டு, கௌசிகன் வந்த செய்தி கூறி, "அவர் ஏதோ சில சந்தேகங்களைப் பற்றிக் கேட்க வந்திருக்கிறார். அவரிடம் சிறிதுநேரம் பேசவேண்டும். அதன் பிறகுதான் நான் போஜனம் செய்யவேண்டும்" என்று கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு கௌசிகனிடம் வந்து மரியாதையாய் உட்கார்ந்துகொண்டு என்ன கேட்கவேண்டுமோ அவற்றைக் கேளும் என்று கூறினார். கௌசிகர், நீர் மஹா ஞானியாயிருந்தும் மாமிசத்தை வெட்டி விற்பது நியாயமாமோ என்றார். தருமவியாதர், "நான் ஜீவஜெந்துக்களைக் கொல்வதில்லை கொல்பவரிடத்தில் விலைகொடுத்து வாங்கி லாபத்திற்கு விற்கிறேன். அந்த லாபத்தைக்கொண்டு மாதாபிதாக்களையும், மனைவி மக்களையும் போஷிக்கிறேன். தானதருமங்களும் செய்கிறேன். ஏனென்றால் மாமிசம் விற்று ஜீவிப்பதே எங்கள் குலதர்மம். குலதர்மத்தை விடக்கூடாது. அன்றியும் இந்த மிதிலையில் ஒருவரும் தமது ஜாதியாசாரம் கடந்து நடக்கக்கூடாது. நடந்தால் ஜனகமஹாராஜா அவர்களைக் கொடுமையாய்த் தண்டிப்பார். இராஜாக்கினைக்கு அடங்கி நடக்கவேண்டுவது அவசியமானது. அதனால் பாபம் அணுகாது" என்றார். கௌசிகர் அந்தப் பதிவிரதை யென்னை உம்மிடம் அனுப்பினதை நீர் எப்படி அறிந்துகொண்டீர்? அந்தம்மாள் உம்மை யெவ்வாறு அறிந்துகொண்டார்? இது வெகு ஆச்சரியமாயிருக்கிறது; அதை விளங்கக் கூறவேண்டு மென்றார்.

தருமவியாதர், "குலாசார முறை தவராமல் நடந்து தெய்வத்தை யாராதிப்பதினாலேதான் நாங்களிருவரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டோம். குலதர்மமும் சாதியாசாரமும் கர்மபந்தங்களை யொழிப்பதற்காகவே தெய்வத்தினால் நிருமிக்கப்பட்டன. அதனை இரிஷிகளுணர்ந்து வெளியிட்டார்கள். அரசர்கள் அந்தத் தருமங்களைச் சிதையாமல் பரிபாலிக்கிறார்கள். அப்படிப் பரிபாலிப்பது க்ஷத்திரியகுலாசாரம். அந்தம்மாள், ஸ்திரீகளின் தருமத்தை நன்றாபுணர்ந்து பதிவிரதா தருமத்தின் நெறிதவராமல் நடந்து தெய்வபக்தி செய்வதினாலே பூர்ணஞானத்தை யடைந்திருக்கிறார். அதனாலேதான் நீர் கொக்கை யெரித்ததையு மறிந்துகொண்டார். உம்மையும்

வென்றார். உம்மிடத்தில் இரக்கங்கொண்டு என்னிடம் அனுப்பினார். நானும் குலாசார நெறி கடவாமல் நடந்து, தெய்வத்தை யாராதிப்பதினாலேயே நீர் வந்த காரணத்தை யறிந்துகொண்டேன். நீர் தவத்தையே பெரிதாகக் கருதி மாதா பிதாக்கள் படுகிற கஷ்டத்தைச் சிறிதும் கவனியாமல் வனவாசம் செய்துகொண்டிருக்கிறீர். அது பயன் தராது. அதனாலேதான் அந்தம்மாளிடம் தோல்வியடைந்தீர். இனியாவது முறையறிந்தொழுகி மெய்த்தவம்புரிவீரானால் பரமஞானம் சித்திக்கும், முத்தியும் எளிதில் கைகூடும்'' என்றார்.

கௌசிகர், ''அந்தம்மாள் எந்தத் தெய்வத்தை யாராதிக்கின்றார்? நீர் எந்தத் தெய்வத்தை யாராதிக்கின்றீர்?'' என்று கேட்டார். தருமவியாதர், பதிவிரதைகளுக்குத் தமது நாயகன்மாரே தெய்வம். பிரமசாரிகளுக்கும் சந்நியாசிகளுக்கும் குருவே தெய்வம். புத்திரர்களுக்கு மாதா பிதாக்களே தெய்வம். மற்றவர்களுக்குப் பரம்பரையாக ஆராதிக்கப்பட்டுவருந் தெய்வமே தெய்வம். இது வேதவிதியாகும். இது பக்தியோகமெனப்படும். யோகங்கள் என்பவை யெல்லாம் மனம் ஒரு வழிப்பட்டுப் பிரமதியானத்தில் நிலைத்திருப்பதற்காகச் செய்யப்படும் ஒரு அப்பியாசமே யாகையால், இந்த யோகங்களெல்லாம் ஞானசித்திக்கு மூலங்களாகின்றன. இந்தப் பக்தியோகம் எளிதிற் செய்யக்கூடியது. இதற்கு உபதேசக் கிரமம் வேண்டுவதில்லை. எந்த விஷயத்திலும் குருவை மறவாமல் தியானிக்கவேண்டும். குருதியானமில்லாத பக்தி சிறப்படைவதில்லை. குருபக்தியிருந்தாலும் மாதா பிதாக்களை வழிபடாவிடில் அது பயன்தராது. நீர் மாதாபிதாக்களை அலட்சியஞ் செய்து தவமுயற்சியிலிருந்தமையால் பெரும் பயனாகிய ஞானசித்தியை யடையவில்லை'' என்றார்.

கௌசிகர், நீர் வழிபடுந் தெய்வம் யாது? அதை யெனக்குத் தெரிவித்தால் நானும் அந்தத் தெய்வத்தை ஆராதிப்பேன் என்றார். தருமவியாதர், நான் வழிபடும் மெய்யான தெய்வத்தை உமக்குப் பிரத்தியட்சத்தில் காட்டுகிறேன் வாரும் என்று அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் சென்றார். அங்கே ஒரு அறையிருந்தது. அந்த அறையில் பரிமள சுகந்தம் வீசியது. மந்தமாருதம் உலாவிக்கொண்டிருந்தது; போதுமான பிரகாசம் நிறைந்திருந்தது. அங்கே ஒரு கட்டிலில் வெண்மையான வஸ்திரத்தினாற் போர்த்த ஒரு மெத்தையிட்டிருந்தது. அதன்மேல் மிக்க வயது முதிர்ந்த ஒரு கிழவனும் கிழவியுமாகிய தம்பதிகள் சாய்ந்துகொண்டு சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்வறைக்குள் தருமவியாதர் நுழைந்து அவ்விருவருக்கும் மரியாதையாக வணங்கிக் கௌசிகர் வரவைத் தெரிவித்து அஞ்சலியஸ்தராய் நின்றுகொண்டிருந்தார். அவர்கள் ஆசீர்வசனங்கூறிக் கௌசிகரை நோக்கிச் சுவாமிகாள்! நாங்கள் எழுந்திருக்கச் சக்தியற்றவர்களா யிருக்கிறோம். எழுந்து வந்தனம் செய்ய முடியாது என்று தலையைத் தாழ்த்தி வணக்கம் செய்து மரியாதை

யாக ஒரு ஆசனத்தில் உட்காரச் செய்து, யோக க்ஷேமங்களை விசாரித்து உபசார வசனங் கூறினார்கள். பிறகு தருமவியாதரை நோக்கி உட்காரு என்று கூறியபின் அவர் உட்கார்ந்துகொண்டு கௌசிகரை நோக்கிச் சொல்லுகிறார்.

சுவாமீ! இவ்விருவரும் எனது தாயுந் தந்தையுமாம். இவர்களே நான் வழிபடும் தெய்வம். இவர்களைத் தவிர வேறு தெய்வத்தை நான் அறிய வில்லை. காலைமாலை பகலாகிய திரிகாலங்களிலும் இவர்களை வழிபடுகிறேன். இவர்கள் பாதங்களில் மலர்சொரிந்து அர்ச்சித்துப் பூசிக்கிறேன். மத்தியானத்தில் இவர்களுக்கு ஸ்நானம் செய்வித்து சுத்த வஸ்திரமுடுத்தி சந்தனாதிகளால் அலங்கரித்து, இனிமையான உணவு புசிப்பித்துப் படுக்கையி லுட்காரவைத்துச் சற்றுக் களையாறச் செய்து அதன்பிறகுதான் நான் புசிப்பேன். இரவில் அவர்களைப் புசிப்பித்துப் படுக்கவைத்து அவர்கள் தூங்கினபிறகு நான் புசிப்பேன். காலையில் எழுந்திருந்ததும் அவர்களுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்துவிட்டுச் சிறிது ஆகாரம் கொடுத்துப் படுக்கையில் வைத்துவிட்டு அதன்பிறகு நான் என் தொழிலைச் செய்கிறேன். எனக்கு மாதாபிதாக்களைத் தவிர வேறு தெய்வமில்லை. அவர்களை யுபசரித்து மகிழச்செய்வதே தெய்வாராதனை. இந்த ஆராதனையினாலேயே நான் முடிவற்ற மெய்ஞ்ஞானத்தையும் பெற்றேன். நீர் மாதாபிதாக்களை யலட்சியம் செய்துவிட்டு வனத்துக்குப்போய்த் தவம் செய்கிறீர். அந்தத் தவம் சரியான பலனளியாது. இனி நீர் உமது ஊர் போய்ச் சேர்ந்து நல்ல குணமும் அழகுமுள்ள கன்னிகையை விவாகம் செய்துகொண்டு மாதா பிதாக்களை ஆராதனை செய்யும், என்று கூறி அவர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான சமாதானங் கூறித் திருப்தி செய்வித்து அனுப்பிவிட்டார். கௌசிகர் ஊருக்குப் போகும்போது அந்தப் பதிவிரதையைக் கண்டு வந்தனம் செய்து தருமவியாதரிடம் சென்றதும் அவரால் சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியானதும், அவர் உபதேசம் செய்ததையும் கூறி விடை பெற்றுக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து மாதாபிதாக்களை வழிபட்டு மெய்ஞ்ஞான சித்திபெற்றுச் சிறந்து விளங்கினான்.

மாதா பிதாக்களைத் தெய்வமாகக் கருதி வழிபடாவிட்டாலும், அவர்களைக் கஷ்டதசையில் வையாமல் கூடியவரையில் அன்ன வஸ்திராதிகளாலுபசரிக்கவேண்டும். அப்போது தெய்வம் அனுக்கிரகம் செய்யும். ஆராதனை செய்யும்போது மனம், வாக்கு, காயம் மூன்றும் ஒத்திருக்கவேண்டும். அதை வேறு இலௌகிக வியாபாரத்திற் செலுத்தக்கூடாது. அதற்காக ஆவாகனாதிக்கிரியைகள் ஏற்பட்டன. மனம் சொரூபத்தைச் சிந்திக்கவேண்டும். வாக்கு மந்திரங்களைச் சொல்லவேண்டும். கைகள் அபிஷேகாதிக் கிரியைகளைச் செய்யவேண்டும். மந்திரங்கள் சரியாய்க் கிடையாத பட்சத்தில் ஆராதிக்கிற தெய்வத்தின் மூலமந்திரங்களைச் சொல்லிச் செய்ய

வேண்டும். சைவர்கள் பஞ்சாட்சர மந்திரமும் வைணவர் அஷ்டாட்சர மந்திரமும் பிரதானமாய்க்கொள்ளவேண்டும். அல்லது தங்களுக்கு உபதேசமாயிருக்கிற வேறு மந்திரங்களைக்கொண்டும் செய்யலாம். பூசை முறை பலவகையாகும் ஆயினும் எல்லாருக்கும் பொதுவில் சோடசோபசார பூஜையென்று சிறந்த பூஜை முறை ஒன்றுண்டு. அது சிறப்புடையது.

அவையாவன :—சொரூபத்தில் ஆவாகனஞ்செய்தல், ஆசனமிடல், பாத்தியம் (கால்கழுவ நீர் தரல்), அர்க்கியம் (கைகழுவ நீர் தரல்), ஆசமனம் (மூன்றுதரம் நீரை யுட்கொள்ளுதல்), ஸ்நானம் செய்வித்தல், வஸ்திரம் சாத்துதல், பூணூலிடல், சந்தனமிடல், புஷ்பமாலை சாத்தல், அட்சதை சாத்தல், தூபம் (வாசனைப்புகை) காட்டல், தீபம் காட்டல், நைவேத்தியம் செய்தல், தாம்பூலமளித்தல், அர்ச்சனை செய்தல், கர்ப்பூர ஆர்த்தி காட்டல் என்பனவாம். இவைகளை யெல்லாம் அவ்வத் தெய்வத்திற்குறிய மூலமந்திரங்களைச் சொல்லிச் செய்து பின்பு மந்திரம் ஜபித்துத் தியானம் செய்யவேண்டும். தான் ஆராதிக்குந் தெய்வத்தின் சொரூபம் எப்போதும் தன் மனதிலிருக்கும்படி பழகவேண்டும். எப்போதும் மந்திரத்தையும் நாவசையாமலுச்சரிக்கவேண்டும். தெய்வத்தின் புகழ்ச்சியாகிய சரித்திரங்களையும், ஸ்தோத்திரப் பாடல்களையும் படிக்கவேண்டும். கெட்ட சகவாசங்களையும் பொய் பொறாமையாகிய குற்றங்களையும் விலக்கவேண்டும். சர்வ ஜீவன்களிடத்தும் அன்பு பாராட்டவேண்டும். (தொடரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

தமிழ் நாட்டுக்கு ஆனந்தனின் உதவி.

ஒன்பது ஆண்டுகளாக நமது ஆனந்தன் நம் நாட்டுக்குச் செய்துள்ள பேருதவியைக் கணித்தெழுதுந் தரமன்று ; நமது கொள்கையிலுஞ் சரி, பிறமதக் கொள்கையிலும் அதன்மாட்டு நடுநிலைமை ஏற்று எழுதுந் திறத்திலுஞ்சரி நமது ஆனந்தன் ஓர் அரசன் போன்று விளங்குகின்றான்.

நவீன நாகரீகமென வெற்றுரை நவின்று பின்வரும் சீர்கேட்டை நினைக்காமல், அற்ப சுகத்தைக் காட்டி அறவழியை அகற்றும் சீர்திருத்தத்தைக் கொடிதென்றெண்ணமல், தற்காலம் பெரிதும் அவாக்கொண்டிருக்கும் மனிதவாழ்க்கை நடைமுறை மாற்றத்தில், அலைந்த வாழ்வு மறைந்துள்ளனவென்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல காட்டி முன்னெச்சரிக்கையாக எடுத்தெழுதி ஓதிவருவதில் மந்திரியைப்போலும், நித்திய வாழ்விலும் கடமையிலும் உள்ள குறையையும் அதில் பண்டையக்காலமிருந்த நிலைமையையும் காலரீதி அறிந்து தள்ளற்பாலனவற்றை தள்ளியும் கொள்ளற்பாலனவற்றை கொண்டும் வாழ்வின் இலக்கணங் கூறுவதில் லோக குருவைப் போன்றும் விளங்குகின்றானென்பது மிகையாகாது.

மேல் கண்டவற்றால் உலக தர்மம் எவ்வளவோ வளருகின்றது என்பதைக் கண்ட சகோதரர்கள் எல்லோரும் ஆனந்தனுக்கு பெரிதுங் கடமைப்பட்டுள்ளோமென்பதைக் கூறவேண்டுவதில்லை. ஆனந்தனிலுள்ள விஷயங்களைக் கையாண்டுகூட வேறு பத்திரிகைகளில் வியாசங்களும் வருகின்றன. பிரசங்க மேடைகளிலும் பலர் கையாண்டு வருகின்றனர். இவ்வளவு பெரிய நன்மையை உன்னிப் பார்த்தால் நமது கடமை விளங்கும். இந்த நன்மையைப் பெறாத மனிதர்கள் நம்மிடை மிகுதியாகவே காணப்படுகின்றனர். அவர்களுக்கு இந்த நன்மையை உபயோகப்படுத்தி வைப்பது சந்தாநேயர்களாகவுள்ள எல்லாருக்கும் கடமை என்பதை மீண்டுங் கூற வேண்டுவதில்லை.

ஆனந்தனை (வாசிப்போர்) தருவிப்போர்களிலும் சிலர் தமக்கும் மாதம் ஒரு பத்திரிகை வருகிறது என்றதோடு திருப்தி அடைகின்றனர். இது அவர்களுக்கு ஒரு பெருமைபோலும். அவர்கள் அதனைப் படிக்கிறதில்லையாயினும் அதுவும் பிறருக்குப் பயன்படுவதுபற்றி சந்தோஷப்படுகிறேன். இதற்கெல்லாம் முதற் காரணம் ஆனந்தனின் விஷய வுயர்வும் குறைந்த சந்தாவுமேதான். சில மாதங்களுக்கு முன் இதில் வெளியிடப்பட்டிருந்தபடி ஓர் சந்தா நேயர் தன் விலாசம் அச்செழுத்திலில்லாத காரணங்கொண்டு பத்திரிகையை நிறுத்திவிடக் கோரினர் என்பதை நோக்கின், ஒன்பது வருடங்கள் போல அநுபவங்கொண்டும் அவ்வாறு ஓர் சந்தாநேயர் இருப்பதை உன்னுங்கால் தமிழ் மக்களிடை பத்திரிகையின் அவா எவ்வளவிலிருக்கிறதென்பது விளங்கும்.

ஆதலால் சென்ற வைகாசிமீ பத்திரிகையில் "சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு" என்ற தலைப்பின்கீழ் சந்தாவை ரூ. 1-8-0 ஆக உயர்த்தி பக்கங்களை கூட்டவேண்டுமென்று ஓர் நண்பர் குறிப்பிட்டதையும், அதிபர் குறிப்பையும் அறிந்துளோர்கள் செய்யவேண்டிய தென்னவென்பதை நாமும் ஓர் பத்திரிகையை நடத்தி விட்டுவிட்ட அநுபவத்தைக்கொண்டு கூறுவதால் நேயர்கள் கவனிக்க வேண்டுகிறேன்.

ஆசிரியர் சொல்லியபடி சந்தாவைக் கூட்டுவது சிறந்ததல்ல. நேயர்கள் ஒவ்வொருவரும் சற்று சிரமமெடுத்துக்கொண்டால் குறைந்தபக்ஷம் 3 பேர்களையேனும் சந்தா நேயர்களாகச் சிபார்சு செய்வது கடினமல்ல. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெயரையாவது சேர்த்துவிட்டால் உலக நன்மைக்குப் பாடுபட்டவர்களாகவே முடியும்.இதுவரை நான் சுமார் 40 சந்தா நேயர்களைச் சேர்த்தனுப்பியுள்ளேன். இத்துடன் 3 நேயர்களுக்கு புதிதாய்ச் சிபார்சு செய்தனுப்பியிருக்கிறேன். சந்தாத் தொகையை மணியார்டர் செய்வதுதான் சிலாக்கியம். அவ்வாறு செய்வதாயின் 10-வது ஆண்டு முதல் ஆனந்தனின் பக்கங்கள் அதிகமாகவோ பத்திரிகையின் அளவை சற்று பெரிதாகவோ இந்த ஒரு ரூபாய் சந்தாவிலேயே செய்துவிட ஆசிரியர் அவர்களுக்கு தூண்டுகோலாகும்.

தமிழ்நாட்டில் இந்த ஒன்பது வருடத்துக்கிடையில் ஆனந்தனைக் கண்டு பொருமைப்பட்டோ சுதாவாகவோ பல பத்திரிகைகள் புறப்பட்டு மடிந்துபோயிருக்கின்றன. அப்புதிய பத்திரிகைகளிற் சிலவற்றிற்கு நானும் சந்தாப்பணம் அனுப்பியும் நண்பர்களைச் சிபார்சு செய்தும் நஷ்ட மடைந்திருக்கிறேன். தமிழ் நாட்டுக்கு ஆனந்தனைப்போன்று எத்தனை பத்திரிகைகள் வெளிவந்தாலும் தகும். ஆனால், அவைகளை நடத்துவோர் நாட்டிடையுள்ள நிலைமையைக் கவனித்து நடத்தாத குறைகளும் இருக் கின்றன. அவைகளைப்பற்றியும், பத்திரிகையின் உற்பவ முதலியவற்றைப் பற்றியும் பின்னர் ஓர் வியாசம் எழுத உத்தேசித்து இதனை இத்துடன் முடித்துவிடுகின்றேன்.

ஆசிரியர் அவர்களும் 10-வது ஆண்டுமுதல் பத்திரிகையை சற்று பெரிதாக்கி அல்லது பக்கங்களைக் கூட்டி சில புதிய முறைகளுள்ள வியா சங்களைக்கொண்டு நிலவும்படி செய்ய எல்லாம்வல்ல இறைவன் கிருபை செய்வாராக.

இதுகாறும் ஆனந்தனைப்பற்றி சில நேயர்கள் எழுதிய வியாசங்களை அவை தற்புகழ்ச்சியாகக் கருதப்படுமென்றெண்ணிப் பத்திரிகாசிரியர் வெளியிடாது விட்டனரென்று அறிகிறோம். ஆசிரியரவர்கள் இதையும் அவ்வாறு புறக்கணிக்காமல் பொதுநலத்தையும், சஞ்சிகையின் அபிவிருத் தியையும் கோரிப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஆனந்தனைப் பற்றி சந்தாநேயர்கள் வலியக்கூறும் உண்மையைத் தற்புகழ்ச்சியெனக் கருதலாகுமோ.

இ. சு. சிவராமலிங்கம் பிள்ளை,
ஆனந்தநிலையம், விஜயபுரம்.

குறிப்பு :—ஆனந்தனுக்குச் சந்தாநேயர்களின் ஆதரணை யன்றி வேறெவ்வித உதவியுமில்லையாதலின் நம் தமிழ்மொழியின் முன்னேற்றத் தையும், தாய்நாட்டின் க்ஷேமத்தையும் கோரும் அறிவாளிகளாகிய நண்பர் கள் ஆனந்தனது அபிவிருத்தியில் சிரத்தை யெடுத்துக்கொள்வார்க ளென்று பூரணமாய் நம்புகிறோம். பத்திரிகாசிரியர்.

" நற்போதனைகள் "

1. மார்க்கத்தில் போகும்போது மண்மேடு, பசுமாடு, தெய்வம், பிராமணன், நெய்க்குடம், தேன்குடம், நாற்சந்தி, அரசு முதலிய புண் ணிய விருக்ஷம் நேரிட்டால் அவைகளைப் பிரதக்ஷணமாகத் தாண்டிப் போகவேண்டியது.

2. கன்றுக்குட்டிக் கட்டுத்தரியைத் தாண்டக்கூடாது. மேகம் மழை பெய்யும்போது ஓடப்படாது. ஜலத்தில் தன் உருவத்தைப் பார்க் கவும்கூடாது.

3. தன் மனைவியுடன் ஒரு பாத்திரத்தில் புசிக்கப்படாது. அவள் சாப்பிடும்போதும், மையிட்டுக்கொள்ளும்போதும், எண்ணெ யிட்டுக் கொள்ளும்போதும் ஒருகாலும் பார்க்கலாகாது.

4. கிருகஸ்தன் ஒரு வஸ்திரத்துடன் அன்னம் புசிக்கப்படாது. வஸ்திரமில்லாமல் ஸ்நாநம் செய்யலாகாது. சாம்பல், மாட்டுத் தொழுவம், உழுதநிலம், ஜலம், யாகசாலை, மலை, பாழ்ங்கோயில், புற்று, நில வெடிப்பு முதலிய விடங்களில் மலஜலங்களை விடக்கூடாது.

5. நெருப்பை வாயினலூதப்படாது. சுத்தமான வஸ்துக்களை நெருப்பில் போடக்கூடாது. காலை அக்கினியில் காய்ச்சலாகாது. உயரமாகப் படுத்துக்கொண்டு அக்கினியைக் கீழே வைக்கலாகாது. அதைக் காலாற் றாண்டவுங்கூடாது.

6. ஜலத்தில் சிறுநீர், மலம், கோழை, எச்சில்பட்ட வஸ்துக்கள், இரத்தம், விஷம் முதலியவைகளைப் போடக்கூடாது. குடியில்லாத வீட்டில் தனியாய்ப் படுக்கவும் ஆகாது.

7. தண்ணீரை இரண்டு கையினலெடுத்துச் சாப்பிடப்படாது. பக்ஷணங்களை மடியில் வைத்துக்கொண்டு புசிக்கலாகாது.

8. வெங்கலப் பாத்திரத்தினலொருபோதும் கால் சுத்தி பண்ணலாகாது. பின்னமான மண் பாத்திரத்திலும், மனதுக்கு ஒவ்வாத பாத்திரத்திலும் புசிக்கலாகாது. குடுமிக்கு வெளியில் பூவைச் சுத்தலாகாது. வீடு, ஊர் முதலான விடங்களில் வாசற்கதவு சாத்தியிருக்கும்போது வேறு வழியில் உள்ளே பிரவேசிக்கலாகாது.

9. படுக்கையில் உட்கார்ந்துகொண்டும், இடது கையில் அன்னத்தை வைத்துக்கொண்டும், நடந்துகொண்டும், ஆசனத்தின்மீது இலை போட்டுக்கொண்டும், சாப்பிடக்கூடாது. முகத்தை மூடிக்கொண்டும், வாயைத் திறந்துகொண்டும், தலையைக் காலில் மாட்டிக்கொண்டும் தூங்கவேகூடாது.

10. இரண்டு கைகளையுஞ் சேர்த்துக்கொண்டு தலையைச் சொரியப்படாது. ஒரு தினத்தில் ஸ்நாநம் செய்தபிறகு அப்பியங்கனம் செய்யலாகாது. சாப்பிட்டுக் கைகால் சுத்திசெய்யாமல் தலையை இடது கையாலும் தொடக்கூடாது.

11. பதிதர், சண்டாளர், புழுக்கையர், மூர்க்கர், பொருள் முதலியவற்றால் கர்வமடைந்தவர்கள், தாழ்ந்த சாதியார் இவர்களுடன் ஒரு மரத்தினிழலிற்கூட ஒருமித்து வசிக்கக்கூடாது.

12. பிண்ணாக்கு முதலியன சாரமில்லாத பதார்த்தங்களைப் புசிக்கலாகாது. அளவுமீறி ஆகாரத்தை யதிகமாகப் புசிக்கப்படாது. வயிற்றைப் பாதி பங்கு அன்னத்தாலும், காற்பங்கு ஜலத்தாலும் நிறப்பிக்கொண்டு மீதி காற்பங்கு வாயு சஞ்சரிக்கத்துக்கொண்டிருக்க விடவேண்டியது.

[இது மநுதர்ம சாஸ்திரம் நான்காவது அத்தியாயம் ஆகிதாக்கினி என்ற விஷயத்திலுள்ளது.]

S. V. பழனியப்ப பிள்ளை,
சாலியாபாளையம், கரூர்.

4

"எல்லாம் இறைவன் செயல்"

"என்செயலா லாவதியாதொன்றுமில்லை யினித்தெய்வமே
யுன் செயலேயென் றுணரப் பெற்றேன்........"

1. இஃது அவனருளாலே அவன்றாள்வணங்கி இருளினீங்கி இறைவனோ டிரண்டறக்கலந்த பட்டினத்தடிகளது திருப்பாசுரத்தின்கண் உள்ள இரண்டடிகள். இதன்பொருள் :—உயிராகிய என்னுடைய செயல் யாதொன்றும் இல்லை ; எல்லாச் செயல்களும் கடவுளாகிய உன்னுடையவையே என்பது.

2. இவ்வுண்மை உணர்ச்சியிலேயே உயர்ந்தோர் ஓவாமல் உறைத்து நிற்கின்றனர். எம்மனோரோ சிற்சில காலங்களில் இவ்வுணர்ச்சி எய்தப் பெற்று சீக்கிரத்தில் மறந்துவிடுகிறார்கள். அக்காலங்கள்தான் யாவை யோவெனில், எதிர்பாராத தீமைகள் வந்தகாலம், எதிர்பார்த்திருந்த நன்மை எய்தப் பெறாதகாலம். இவைபோன்ற காலங்களே என்பது. இக் காலங்களிலுண்டாகும் உண்மையுணர்ச்சியை உடனே மறந்துவிடாமல் ஞாபகத்தில்வைத்து அதில் உறைத்து நிற்கவேண்டும் என்னுங் கருத்தை யடக்கியே

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல்"

என்ற செய்யுளை ஞானமாதாவாகிய ஔவைப்பிராட்டியார் அருளிச் செய்தார்.

3. இனி இவ்வுணர்ச்சி எய்தினர் எய்தும்பயனை ஆராய்வாம் :— துன்பம் வந்தகாலத்தில் எம்மனோர் இவ்வுணர்ச்சியை எய்தினால் அத்துன்பம் கொஞ்சங் குறைகிறது. இன்பம் வந்தகாலத்தில் இவ்வுணர்ச்சியைப் பெற்றால் இறைவனிடத்துக் கொஞ்சம் அன்பு நிகழ்கிறது. அறிவுடையோர் இவ்வுண்மையுணர்ச்சியில் எக்காலமும் உறைத்து நிற்பதால் எய்தும் பயன் யாதோவெனில், அவர்கள் மாயை கன்மங்களினின்றும் விடுதலை அடைகிறார்கள். "அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யானாகவே அஞ்ஞானகன்மம் பிரவேசியா" (மெய்கண்ட தேவர்). இவ்வுணர்ச்சியில் எக்காலத்து உறைத்து நிற்கப் பெறுவரென்னில் சிவஞானந்தோன்றிய காலத்து நிற்கப் பெறுவர். "ஊன்செய்யாஞானந்தானுதிப்பின் அல்லால் ஒருவருக்கும் யான்எனது இங்கொழியாதன்றே"(அருணந்திசிவாசாரியர்).

4. இனி இவ்வளவு பெரும்பயனை அளிக்கவல்ல இவ்வுணர்ச்சியில் உறுதியாய் நிற்கவிடாது கிளம்புந் தடைகளை ஆராய்வாம். 1. "ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது" என்னும் ஆன்றோர் திருவாக்கின் பொருள் என்ன? என்பது. 2. "தாந்தா முன் செய்தவினை தாமே அனுபவிப்பர்" என்பதன் பொருள் யாது ? 3. "உயிரின் செயல் யாதொன்று

யில்லையென்பது பொருந்துமாற்றோடு பொருந்தவில்லை. என்னை? எல்லாம் இறைவன் செயல், உயிரின் செயல் ஒன்றும் இல்லை எனின் உயிர்கள் துன்புறுவானேன்? அருட்பெருங் கடலாகிய அண்ணல் துன்புறுத்துமா? துன்புறுத்தான். ஆகவே உயிர்கள் துன்புறுதல் அவை தாம் அறிவின்றிச் செய்யும் செயல்களாலேயாம்; என்பதே பொருத்தமா யிருக்கின்றதாகலினென்க. 4. உயிர்களுக்கும் அறிவு, இச்சை, தொழில் உண்டென்பது என்னை? இனி முதற்றடையை ஆராய்வாம் :—

(1) அதன்பொருள்:—வினையானது தன்னைச் செய்தவனுக்கு தன் பயனைத் தராமல் தொலையாது என்பது. தொழில் அறிவற்றது. ஆகலின் அது தன்னைச் செய்தவனை நாடிப் பயனளித்தற் கூடாது. ஆகவே பயனளித்தல் வினையின் செயலென்றது உபசாரமேயொழிய அதன் செயலன்று. இறைவனருட்செயலே. உயிர் அறிவுப் பொருள்தானே, அது தன் வினைப்பயனை நாடியடையுமென்று சொல்லலாமோவெனின் சொல்லலாகாது. என்னை? உயிர்சிற்றறிவுள்ளது. அறிவிக்க அறியுந் தன்மைத்தன்றித் தானே அறியுந்தன்மைத்தன்று. மறந்து மறந்து அறியுந்தன்மைத்து. கருவியோடுகூடியயன்றி அறியுந்தன்மைத்தன்று. இத்தன்மைத்தாகிய உயிர் தன் வினைப் பயனைத் தானே அறிந்தனுபவித்தற் கூடாதாகலின் என்க. "செயலணையா சென்று" என்பதும் "அவ்வினையைப் பேராமல் ஊட்டும் பிரானின் றுகராரேல்-ஆர்தாம் அறிந்தணைப்பார் ஆங்கு" (மெய்கண்ட தேவநாயனார்).

(2) இனி இரண்டாவது தடையை ஆராய்வாம். அதன்பொருள் :— உயிர்கள் தாம் தாம் செய்த வினையின் பயனைத் தாமேயனுபவிப்பர் என்பது. இப்பொருள் நாமெடுத்துக்கொண்ட பொருளோடு மாறுபடுகின்றது. எங்ஙனமெனில்:—தாந்தாஞ் செய்த வினையெனவே உயிர்கட்குச் செயல் உண்டென்பதாகிறது. "என் செயலாவதியா தொன்றுமில்லை" எனவே உயிர்களுக்கு யாதொரு செயலுமில்லை என்பது பெறப்படுகின்றது. இங்ஙனம் மாறுபடுகின்றதெனில் அது பொருளன்று. ஆயின் பொருள் யாதோவெனின் கூறுகின்றோம். உயிர்களின் அறியாமையைப் போக்கி அறிவை விளக்கி அன்பைப் பெருக்கி இன்பை விளக்கவேண்டுமென்றும் பெருங்கருணைகொண்டு ஈசன் அவற்றோடு இரண்டறக்கலந்து அவையே தானேயாய் ஐந்தொழில் நடத்திவருகின்றான். அது எதுபோலவெனின்:-கண்ணானது உருவத்தைக் காணுங்கால் உயிரை இன்றியமையாது.

இங்ஙனம் உயிரை இன்றியமையாத கண் உருவத்தைக் காணுங்கால் உயிரினதுணர்வு கண்ணொளியெனத் தானென வேற்றுமையின்றி உடனாய் விரவிநின்று கண்ணுக்குக்காட்டிய அதனைக் கண்கண்டதென்றும் கண்ணையதிட்டித்து நின்ற உயிர் கண்டதென்றும் பகுத்தறியவாராது இரண்டன்காட்சியும் ஒன்றனையொன்றுவிடாது அத்துவிதமாகி ஒருங்கே நிகழும். இதுபோலவென்க. இங்ஙனம் நிகழ்கின்ற காலத்தில் கண்ணானது

சடப்பொருளாயிராமல் சிற்றறிவுடைய பொருளா யிருக்குமானால் தானே கண்டதாகவும் காட்டியவர் ஒருவரில்லையென்றும் எண்ணிவிடும். அது போல் உயிர்களும் சிற்றறிவினவாகலான் தாமே செய்ததாக எண்ணிவிடு கின்றன. இங்ஙனம் எண்ணப்பட்ட வினையென்பதே அதற்குப் பொருளென்க. இக்கருமத்தையே "நான் செய்தேன் எனுமவர்க்குத் தானங் கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்கும் கன்மம்" என்னும் ஆன்றோர் அருள்வாக்கு அறிவுறுத்துகின்றது.

(3) இனி மூன்றாவது தடையை ஆராய்வாம்:—இறைவன் தன்னுடைய பேரன்பினால் உயிரின் அன்பை விளக்க அது அறியாமை காரணமாக விருப்பாக மாறுகின்றது. அறியாமையின் குணமாகிய வெறுப்பும் உண்டாகிறது. இவ்விரண்டையும் போக்குவதற்கு இறைவன் இரண்டறக் கலந்து நின்று நல்வினை தீவினைகளை நிகழ்த்திப் பயனை (உணர்த்துகின்றான்) ஊட்டுகின்றான். பயன் இன்பதுன்பங்கள்.

"அருளினாலுரைத்த நூலின் வழி வாராததன்மஞ் செய்யின் இருளுலா நிரயத்துன்பத்திட்டிரும் பாவந் தீர்ப்பன்—பொருளுலாஞ் சுவர்க்கமாதி போகத்தாற் புண்ணியந் தீர்ப்பன்—மருளுலாமலங்கடீர்க்கும் மருந்திவை வைத்தியனாதன்" என்னுஞ் செய்யுள் இக்கருத்தை வலியுறுத்துகிறது. இங்ஙனம் இன்பதுன்பங்களை யடையவே அறியாமை தேய்ந்து அறிவுபெருகும். அறிவு பெருகப் பெருக அறிவில் பொருள்களிடத்து இருந்த விருப்பம் சிறிது சிறிதாக நீங்கி உயிர்ப்பொருள்களிடத்து விருப்பம் நிகழும். பின்னவ்விருப்பமும் சிறிது சிறிதாகக் குறைந்து இறைவன் பால் நிகழும். இந்நிலையில் எல்லாம் இறைவன் செயல் என அறிந்தமையால் வெறுப்பே நிகழாது. இதனையே,

"உடுப்பானும் பாலனமுண்பானும் உய்வித் தொருவர்தம்மைக்-கெடுப்பானுமேதென்று கேள்வி செய்வானும் கெதியடங்கக் - கொடுப்பானும் தேகியென்று ஏற்பானும், ஏற்கக் கொடாமல் நின்று-தடுப்பானும் நீயல்லையோ தில்லைத் தாண்டவனே" என்னும் ஆன்றோர் செய்யுள் வலியுறுத்துகின்றது.

(4) இனி நான்காவது தடையை ஆராய்வாம்:—அது என்னவெனில் ஆன்மாவுக்கும் அறிவு, இச்சை, தொழில் உண்டென்று ஆன்றோர் கூறுகின்றார்களே. அதன்பொருள் என்னை? என்பது அறிவு என்பது அறிவிக்க அறியும் அறிவு. இச்சையென்பது மேலே கூறிப் போந்த விருப்பே. தொழிலென்பது அனுபவித்தல்.

அஃதாவது அவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் முதலிய விடயங்களை யுணரும் உணர்ச்சிக்கண்ணே தன்னியல்பு இதுவென வேறு காணப்படுமாறின்றி அவ்வவ்விடயங்களே போல அதுவதுவாய்ச் செறிந்து நின்றறிதல். அஃதாவது அழுந்தியறிதல். அதுவும் இறைவன் உடனின்றுணர்ந்தாற்றான் நிகழும். 'தொண்டனேன் நினையுமாநினையே', 'விரும்புமா விரு

ம்பே', 'தொடருமா தொடரே', 'நுகருமா நுகரோ', என்றிவ்வாறு முத்தி நிலைபற்றி ஓதிய திருவாக்குகளும் எழுந்தன. இனிச் சிலர் உடல் முதலிய கருவிகளிற் காணப்படும் செயல்களெல்லாம் உயிரின் ஆற்றலால் நிகழ்கின்றன வென்கின்றனர். அவை உயிர்களது ஆற்றலால நிகழவில்லை. உயிர்களுடன் இரண்டறக் கலந்து நின்று ஐந்தொழில் நடத்தும் இறைவனாற்றலால் நிகழ்கின்றன. பழுக்கக் காய்ந்த இரும்பின்கண் காணப்படும் சுடும் ஆற்றல் இரும்பினுடையதா தீயினதா? தீயினதே. இரும்பினதன்று. அது போலவே இறைவனது ஆற்றலாலேதான் கருவிகள் தொழிற்படுகின்றன. இக்கருத்தை விளக்கவே "நாமல்ல இந்திரியம் நம் வழியினல்லவழி நாமல்ல" என்னும் திருவாக்கெழுந்தது. இதுபற்றியன்றே மனத்தத்துவ நூல்வல்லாரும் "விரும்புபலமாகவிரும்பு விரும்பியவாறே கருவிகள் தொழிற்படும்" என்கின்றார்கள். இக்கருத்தை நோக்கியே ஔவைப்பிராட்டியார் ஆத்திச்சூடி முதற்செய்யுளில் "அறம் செய்" என்னுமல் "அறஞ் செய விரும்பு" என்று அருளிச் செய்தார்கள்.

என்றிதுகாறுங் கூறியவாற்றால் நம்மாலாவதி யாதொன்றுமில்லை, எல்லாம் இறைவன் செயலெனை உறுதியாகத் தெளிவுறுத்தப்பட்டது. இஃது பேரன்பும் பேரருளும் வாய்ந்த எமதாசிரியரால் நன்குணர்த்தப் பட்டது. ஓம்.

தி. அருணாசலம், ப. ஞா. பா. போதகர்.
தெற்குத்தெரு, குலசேகரன் பட்டினம்.

பகவத்கீதை வசனம்.

(430-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஓ! தேவர்களுக்குத் தேவனே! உமக்கு அன்னியமான வேறு தெய்வமேது, செய்யத்தக்க பாவமேது, புண்ணியங்களேது, பந்தமேது, வீடேது, சாவதேது, வாழ்வதேது? யாவு நீராகவே யிருக்கிறீர். ஆதலின் இன்னது செய்வதெனை யான் ஒன்றுமே யறிகிலேன்.

ஏ பரந்தாம! நான் உமது உண்மையை யுணராதவனாகி, அடாயாதவா, என்மைத்துனா, பசுநிரைகளை மேய்க்கும் யாதவா என்று இவ்வாறு சொல்லத் தகாதனவாகிய வார்த்தைகளையெல்லாம் அறியாது கூறிவிட்டிருக்கிறேன். நான் உமது பெருமையைச் சற்றும் உணராதவனாய் என்னுடைய தோழனென்றும் மைத்துனனென்றும் கருதி, உமது வார்த்தைகளை மறுத்துக் கூறிய பெரிய குற்றங்களை க்ஷமித்தருளவேண்டுகிறேன்.

ஏ கண்ணபிரானே! கருணாகரனே! உண்ணும்போதும், விளையாடும் போதும், உறங்கும்போதும், வீற்றிருந்தபோதும் உமது புராதனமான மகிமையை உணராது செய்த பிழைகளனைத்தையும் பொறுத்தருளப் பிரார்த்திக்கிறேன்.

இந்த உலகங்கள் அனைத்தும் சிருஷ்டித்தவர் நீரே. உமது நிஜ சொரூபத்தை புணர்ந்து யாவராலும் புகழ்ந்து துதிக்கப்படுபவரும் நீரே. குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்து உண்மை உபதேசம் செய்து குற்றங்களைக் களைபவரும் நீரே. அப்படிக் கூறப்படினும், வேதங்களெல்லாம் உன்னினும் மேலானவர்களில்லை யென்று தக்க காரணங்களோடு ஒருமுகமாய் நின்று நிரூபித்தாலும் உன்னருள் பெறாதவர் உன்னை புள்ளபடி யறிய மாட்டார்கள். அந்தகர் அன்னிய உருவங்களைக் காண்பதுண்டோ?

புத்திவிளக்கமில்லாத பால்யபருவத்தில் புத்திரன் செய்த குற்றத்தைத் தந்தை பொறுத்தல்போலவும், விட்டுப் பிரியாத சிநேகன் செய்யும் குற்றத்தை சிநேகத்தில் மிக்கார்கள் க்ஷமித்தல்போலவும், யேழை யேன் தெரியாமற் செய்துவரும் குற்றங்களை யெல்லாம் குணமாகக் கொண்டருளவேண்டும் கருணாநிதியே" என்று பரந்தாமனுடைய பாத கமலங்களில் வீழ்ந்து இன்னும் பின்வருமாறு காண்டீபன் கூறலுற்றான்:-

"ஏ பகவான்! நான் முன்பு ஒருபோதும் கண்டறியாத விஸ்வரூப தரிசனத்தைக் கண்டு சந்தோஷமடைந்தேன். அக்கோரரூப தரிசனத்தால் உண்டான பயத்தால் என் உள்ளம் வியாகூலத்தை யடைந்தது. ஆதலின் ஏ பரந்தாமா! கிரீடத்தையும் சங்குசக்கர கதா கோதண்ட முடைய சதுர்ப்புஜ மூர்த்தமாகிய உருவத்தையே கொண்டருளப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

(இவ்வாறு அர்ச்சுனன் பிரார்த்திப்பதைக் கண்ட பகவான் பயத்தால் வருந்தாநிற்கும் அவனுக்குத் தேறுதலுண்டாகுமாறு சில வசனங்களை மொழிந்தருள்கின்றார்.)

அவ்வாறு தோத்திரம் செய்யும் அர்ச்சுனனை நோக்கி எல்லா வுருவங்களும் தானேயாகிய ஓருருவமாய் நின்ற பகவான் கூறுகிறார் :—

ஏ பார்த்த! பூரணமான பிரகாசமுடையதாய், ஆதியில் யாவற்றையும் படைக்கும் காரணவஸ்துவாய் யாவுமாகிய எனது விசுவரூபத்தை முன்னே யாவரும் அறிந்திலர். இவ்வுலகில் (நீதவிர மற்ற) எவரும் வேதாத்தியயனத்தாலும், யஞ்ஞங்களின் அத்தியயனத்தாலும், மேலான தவங்களினாலும், தானங்களைச் செய்வதாலும், கருமங்களாலும் தரிசிக்க முடியாது. அத்தகைய விசுவரூபத்தைத் தோஷரகிதமான எனது யோகமாயையின் சாமார்த்தியத்தால் நீ தரிசிப்பிக்கப் பெற்றாய்.

ஏ அர்ச்சுனா! எனது விசுவரூபத்தைத் தரிசித்ததால் நீ பீதியடைந்து கலக்கப்படவேண்டாம். பயமின்றி சந்தோஷமனத்தனாய் என் முந்திய சொரூபத்தையே தரிசிப்பாயாக.

(இங்கு சஞ்சயர் திருதராட்டிரருக்குப் பின்வருமாறு கூறுகிறார்.)

"அய்யா திருதராட்டிர பூபதியே! தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத பரந்தாமனாகிய பகவன் அர்ச்சுனனுக்கு அவ்வாறு கூறியபின் சங்கு

சக்கிரம், கதை, பத்மம் இவற்றைத் தரிசித்தருளிய சதுர்ப்புஜ மூர்த்தியாகிய தமது திவ்விய சொரூபத்தைக் காட்டியருளி அவனுக்குண்டாகியிருந்த பீதியையகற்றிக் கிருபைபாலித்தார்" என்று சஞ்சயர் திரிதராட்டிரருக்கு மொழிந்தார்.

(பகவான் அர்ச்சுனனுக்குத் தாம் காட்டியருளிய விசுவரூப தரிசனத்தின் அரியதன்மையை அருளிச்செய்கின்றார்.)

"ஏ பார்த்த! இப்போது நீ தரிசித்த அந்த விசுவரூபத்தை இதுகாறும் ஒருவரும் தரிசித்ததில்லை. இனியும் தரிசிப்போரில்லை. இந்திரன் முதலிய தேவர்களும் அந்த விசுவரூபத்தைத் தரிசிக்க மிக்க ஆவலுள்ளவர்களாக விருக்கிறார்கள். இத்தகைய என்னை எத்தகையோர் அடையலாகுமெனின், என்னிடத்து அநந்நியபக்தி பூண்டவராய், என்னையன்றி வேறு எதனுடைய சம்பந்தமும் கொள்ளாதவரா யிருப்போரே யென்னையபேதமாயடையத்தக்கோராவர்" என்றருளிச்செய்தார்.

"ஏ பார்த்த! எவ்வதிகாரி எனது பிரசன்னத்தின் பொருட்டே சகல கர்மங்களையும் செய்கிறானோ, எவ்வதிகாரி நானே அடையத்தக்க வஸ்து என்னும் நிச்சயமும், ஏனைய சுவர்க்காதி பலன்கள் அடையத்தக்கவையன்று என்னும் நிச்சயமும் உடையவனோ, எவன் தனம் தாரம் புத்திரன் முதலிய எல்லா பதார்த்தங்களினும் பற்றில்லாதவனாய் என்னிடத்துமட்டுமே பற்றுவைத்து யாவற்றையும் எனது சொரூபமாகப் பாவித்துப் பஜிக்கிறானோ, எவன் தனக்குத் தீங்கிழைத்தவர்களிடத்தும் துவேஷம் கொள்ளாதவனோ, இத்தன்மைய அதிகாரியே என்னை யபேதமா யடைதற்குரியவன்" என்று பகவான் அருளினார்.

11-வது அத்தியாயம் முற்றிற்று.

12-வது பக்தியோகவத்தியாயம்.

[ஸ்ரீ பகவான் இதுகாறும் சகுணம் நிர்க்குணம் ஆகிய இரண்டையும் உபதேசித்தருளினார். இவ்விருவகை உபதேசங்கள் அதிகாரி பேதத்திற்குத் தக்கபடி கொள்ளற்பாலனவாம். ஆகையால் அர்ச்சுனன் தனது அதிகார நிச்சயத்தின்பொருட்டு சகுணவித்தை நிர்க்குணவித்தை யிரண்டின் தன்மையையும் அறிய இச்சித்துப் பகவானை நோக்கி வினவுகிறான்.]

அர்ச்சுனன்:—"ஏ பரந்தாமா! பெரியோர்கள் தங்கள் மனதிற்குப் பொருந்திய உருவமாகவே பரமேசுவரனான உம்மைச் சிந்தியா நிற்பரோ? அல்லது பரிசுத்தமான நான்மறைகளுக்கு மெட்டாதான நிர்க்குணப் பிரம்மமாகிய உம்மையே நிரந்தரம் சிந்திப்பார்களோ?" என்று வினவியதற்கு, ஆயர்பாடியிலவதரித்து ஆவினங்களை மேய்த்த கண்ணபிரான் அருளிச் செய்கின்றார்:—

"ஏ அர்ச்சுன! நீ தரிசிக்கும்படி நாம் முன்புகாட்டிய விசுவரூபத்தை ஏகாக்கிர சித்தத்தோடும், சாத்விக சிரத்தையோடும் மனதினால் சிந்தித்து

வாக்கினுற் றுதிப்பவர்கள் எல்லோரும் என்னையே யடைவார்கள். அவர்கள் யாவரினும் சிரேஷ்டராவர். இனி யிவர்களை யன்றி நிர்க்குண உபாசகர்களின் நெறியையும் கூறுதும் கேட்பாயாக.

(இப்போது பகவான் நிர்க்குணோபாசனையைப்பற்றி கூறுகிறார்.)

ஏ காண்டீபனே! வாக்கினுல் இன்னவிதமானதென்று வசனிக்கக் கூடாததாய், மனத்தினுல் இத்தன்மையதென ஒரு விஷயமாக அறியப் படாததாய், எங்கும் நீக்கமின்றி நிறைந்து போக்குவரவற்றதாய், சர்வ சாட்சியாய்ப் பிரகாசிக்கும் நிர்க்குணப்பிரம்ம சொரூபத்தை, கடத்தற்கரிய இந்திரியங்களை நிக்கிரகம் செய்து, சாக்ஷாத்காரமாய் அறியாநிற்பவன் என்னின் அன்னியமாகமாட்டான்.

(பகவான் முன்பு சகுணோபாசகரை யாவரினும் நல்லவர் என்று கூறிவிட்டு இப்போது நிர்க்குண உபாசகர் நானேயாகும், என்னின் அன்னியமல்ல என்று கூறியதால் அர்ச்சுனனுக்குண்டாகும் சந்தேகத்தை நிவர்த்திசெய்யும்பொருட்டு பகவான் கூறுகின்றார்.)

ஏ பார்த்த! ஒரு காரணமுமில்லாததாய், அந்தர் இந்திரிய பகிர் இந்திரியங்களுள் ஓர் இந்திரியத்திற்கும் விடயமாகாததாயுள்ள நிர்க்குணப் பிரம்மத்தை யடையாநிற்பவர்களுடைய வருத்தம் செப்பத்தரமானதன்று. அது வேறொரு கஷ்டத்தோடு ஒப்பிட்டுக் கூறத்தக்கதன்று. அறிதற்கரிய இப்பிரம்ம நிஷ்டை தேகேந்திராதி அபிமானமுடைய மனிதரால் சுலபமாய் அடையத்தக்கதன்று. ஆதலின் அதை யடைந்தவர்களின் மகிமையை அளவறுத்துக் கூறவல்லார் யார்? (ஒருவருமில்லை என்றபடி.)

(தொடரும்.) சீடன்.

அநுபவத்தில் கண்டறிந்த சில வைத்தியக் குறிப்புகள்

1. எலிகடிக்கு. கொடிக்கள்ளிப் பட்டை 2 விராகனிடை, வெள்ளைப் பூண்டு ½ விராகனிடை இவைகளைச் சேர்த்து நீராகாரத்தில் 3 நாள் கொடுக்க குணம்.

2. நாய்கடிக்கு. கறி உப்பும் கற்றாழை மடலும் ஓரளவாய்ச் சேர்த்து அரைத்து 3 தடவை கடிவாயில் கட்ட குணமாம்.

3. காதுப்புழுவிழ. முருங்கையிலைச் சாறு 3 அவுன்ஸ், நல்லெண்ணெய் 4 அவுன்ஸ் சேர்த்து வடித்து காதிலைவிட குணமாகுமென்று Dr. Thomas சொல்லுகிறார்.

4. தலைப்பேன்போக: கறு ஊமத்தைச் சாற்றில் ரஸத்தை அரைத்து பழந்துணியில் தடவி, நிழலில் உலர்த்திச் சிரசில் சுற்றிவைக்க மூன்று ஜாமத்திற்குள் பேனெல்லாம் உதிரும் என்று Mr. Ferguson துரை எழுதுகிறார்.

5. கல்பூரத்தைத் தின்றவர்களுக்கு எலிம்பிச்சம்பழம்சாற்றில் காசுக்கட்டியை அரைத்து கலக்கிக்கொடுக்கச் சுகம்.

மா. அருணுசலம்.

தேகசுகாதாரம்.

புகைக்குடித்தல்.

சகோதர சகோதரிகளே!

புகையிலையினாலும் அதன் பிரிவுகளாலும் இன்னும் சில சாமான்களாலும் செய்யப்பட்ட வஸ்துக்களைக்கொண்டு அக்கினியை நுனியில் பற்ற வைத்து வாயில் வைத்து உறிஞ்சி புகையாக வெளியே சிலர் வாயால் விடுதலும் சிலர் வாயாலும் மூக்கினாலும் விடுதலும் புகையை உள்ளே நிறுத்துதலும் ஆகியவைகளையே புகைக்குடித்தல் என்று சொல்வது. கொஞ்ச காலத்திற்கு முன் அதிக வயதான கிழவர்களிலும் யாரோ ஒருவர் அபூர்வமாகக் குடிப்பதைப் பார்த்திருக்கிறோம். இப்போது 5 வயது முதற்கொண்டு பெரியவர்கள் வரை இக்கெட்ட வழக்கத்தை அனுசரிப்பதுடன் தங்கள் மனைவி, மக்கள் முதலானவர்களுக்கும் பழக்கமாக்குகிறார்கள். இப்புகைக்குடித்தல் என்னும் விஷயமாய் கோயமுத்தூர் ஜில்லா ஊழியச் சங்கத்தார் பிரசுரித்த பத்திரிகையின் மொழிபெயர்ப்பை இதனடியில் வரைகிறோம். இதை வாசித்து உணர்ந்து புகைக் குடித்தல் என்னும் கெட்ட பழக்கத்தை அனுசரித்து வருபவர்கள் விட்டுவிடவும், அனுசரிப்பவர்களும் அனுசரியாதவர்களும் புதிதாக இனிமேல் ஷை கெட்ட வழக்கத்தை பழகிக்கொள்ளாமல் இருக்கும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமெரிக்காவில் பள்ளிக்கூடச் சிறுவர்களைப் பரிசோதித்துப் பார்த்ததில், புகையிலை உபயோகியாதவர்களே தேகவளர்ச்சி, புஷ்டி, மார்பின் விலாசம், உயரம், உள்ளிந்திரியங்களின் உறுதிப்பாடு, ஆகிய இவைகளில் புகையிலை உபயோகிப்பவர்களைவிட மேலான நிலைமையிலிருந்ததாகத் தெரிந்தது. புகையிலை தேகவளர்ச்சியைத் தடுப்பதன்றி மனோ சக்தியையும் தடுக்கிறது. உயர்ந்த பரீக்ஷைகளில் புகையிலை உபயோகியாதவர்களே மற்றவர்களை விட எளிதில் தேறுகிறார்களென்றும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. சுருட்டு குடிப்பது முதலில் உத்சாகத்தைக் கொடுத்தபோதிலும் முடிவில் பெருந்துன்பத்தை விளைவிக்கிறது. கள் முதலான லாகிரி வஸ்துக்களைப்போல் மேலும் மேலும் ஒருவனை குடிக்கச்செய்து முடிவில் குடிப்பவனை அடிமைப்படுத்திவிடுகிறது. அதிகமாக குடிப்பவர்கள் சதா சுருட்டு கையிலில்லாமலிருந்தால் சோர்வும் சோம்பலும் உண்டாய் மந்தபுத்தி புடையவர்களாகிறார்கள்.

புகையிலை குடிப்பவர்களின் கண்பார்வை சீக்கிரம் கெட்டுப்போகிறதென்று தேர்ந்த வைத்தியர்களெல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்கள் வர்ணபேதங்களை அறியச் சக்தியற்றவர்களாகிறார்கள். சிவப்புக்கும் பச்சைக்கும் உள்ள வர்ணவித்தியாசத்தை அறிய சக்தியற்றவர்களாகிறபடியால் அப்படிப்பட்டவர்கள் ரயில் கம்பெனிகளில் வேலை செய்துவரும் போது கைகாட்டி மரத்தின் சைகையைச் சரியாக அறிய முடியாமல் ரயில் வண்டிகளுக்கும் உயிருக்கும் சேதமுண்டாகிறது. கூர்மையான பார்வை

வேண்டியிருக்கிற துபாக்கி சுடுதல் பில்லியார்டு விளையாடுதல் முதலிய காரியங்களைச் செய்பவர்கள் புகையிலையினால் தங்கள் கண்ணின் கூர்மை கெட்டுப்போவதை அனுபவத்தில் கண்டிருக்கிறார்கள்.

புகையிலையானது ஹிருதயத்தையும் பலவீனப்படுத்தி விடுகிறது. சிறிது வேலை செய்தாலும் புகையிலை குடிப்பவர்களின் ஹிருதயம் நிமிஷத்திற்கு 100 முதல் 120 வரை படபடவென்று அடித்துக்கொண்டிருக்கும். இதற்கு 'புகையிலை ஹிருதயம்' என்று வைத்தியர்கள் சொல்வதுண்டு. இதனால் அகால மரணங்கள் நேரிடுகின்றன. இந்நோயைத் தடுக்கவேண்டுமானால் புகையிலை குடிக்கும் வழக்கத்தை நிறுத்தவேண்டும். புகை குடிப்பவர்கள் ஹிருதயம் பலவீனப்படுவதால் க்ஷயரோகம், காசம், முதலிய நோய்களுக்குச் சுலபமாக உள்ளாவார்கள். புகையிலை உபயோகிப்பதால் உதட்டிலுள்ள நிறம் மாறி முகத்திலுள்ள களையும் நீங்கிவிடுகின்றது. புகையிலை குடிப்பவர்களைப் பார்த்தால் எப்பொழுதும் தூக்கம் பிடித்தவர்களைப்போலவே காணப்படுகிறார்கள். புகைக்குடிப்பதனால் பற்களின் ஈரல் தளர்ந்து பற்கள் கருத்து வாயும் துர்நாற்றம் எடுத்துப் போய்விடும். புகையினாலும் விஷத்தினாலும் உதடுகள் கருத்துவிடும். புகை குடிப்பதனால் தேகத்திற்குக் கெடுதல் ஒன்றும் இல்லை என்று சிலர் நம்புகிறார்கள்; ஏனென்றால் புகை குடிப்பவரில் சிலர் திடகாத்திரராய் நீடித்த நாள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இது தப்பான அபிப்பிராயம். புகை குடிப்பதனால் கெடுதி ஒன்றுமில்லை என்றால், சிறுவர்களுக்கும் தீங்கு செய்யாமலல்லவா இருக்கவேண்டும்? அப்படி இல்லையே. மேலும் திடகாத்திரமானவர்களுக்கு ஒரு தீங்கும் விளைவிக்கிறதில்லை என்று வைத்துக்கொண்டாலும் அவர்களுடைய சந்ததியை எப்படிக் கெடுக்கிறதென்று சிறிது கவனித்தால் தெரியவரும். புகை குடிப்பவர்களுடைய பிள்ளைகள் பலவீனமாகவே இருப்பார்கள். சிலர் மலச்சிக்கலை நீக்குவதற்காக புகைகுடிக்கும் வழக்கத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இதுவும் தகுந்த காரண மாகாது. மலச்சிக்கலே உண்டாகாமலிருக்க நாம் வழிதேட வேண்டுமேயன்றி மலச்சிக்கல் ஒவ்வொருநாளும் உண்டாவதற்கு வழி செய்துகொண்டு பிறகு அதை நீக்க புகை குடிக்கப்படாது. நம் தேகத்திலுள்ள அவயவங்கள் ஒவ்வொன்றும் இயற்கை வழிகளிலேயே தம்தம் அலுவல்களைச் செய்யும்படி விடவேண்டுமன்றி புகை குடிப்பது பொடி போடுவது முதலிய செயற்கை வழிகளிலே அவைகளை நடத்தப்படாது.

"சுருட்டுப் புகையைக் காட்டிலும் சிகரெட் புகை மிகவும் கொடியது. சிகரெட்டுப் புகையை சுத்தமானதோர் கைக்குட்டையில் விட்டுப் பார்க்கக் கைக்குட்டையில் படுகிற கறையைக் கொண்டு சிகரெட்டின் கொடுமையை நன்கறியலாம். சிகரெட்புகை படுகிற நமது உள்ளிந்திரியங்களெல்லாம் இதேவிதமாக கறைபடுகின்றதென்பதை மறந்துவிடக்கூடாது. சிகரெட்டு இத்தனை கெடுதி செய்யக்கூடியதா யிருப்பதால், சிறுவர்களில் அனேகர் இதைக் கையாடிவருவது மிகவும் கவலைக்கிடமாயிருக்

கிறது. மேலும் இந்த சிகரெட் பழக்கம் நம் சிறுவர்களிடத்தில் வரவர விருத்தியாகிக்கொண்டு வருமோவெனப் பயப்படவேண்டி யிருக்கிறது.''

"சிகரெட் பழக்கம் விருத்தியாக விருத்தியாக நமது பின் சந்ததிகளால் நாம் அடைந்து கொள்ளக்கூடியதான அனுகூலங்கள் தடைப்படவே கூடும். சிகரெட்பழக்கமுள்ள பிள்ளைகள் உத்ஸாகமாய் வேலை செய்ய மாட்டார்களென்பது மட்டுமல்ல, வேலை செய்வதையே விரும்பமாட்டார்கள்.'' சிகரெட் குடிக்கும் வாலிபர்கள் துஷ்டச் சகவாசர்களையும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். சிறு பிள்ளைகள் இத்துர்ப்பழக்கம் தம் பெற்றோர்களுக்குத் தெரியாமலிருக்கவேண்டி பொய் பேசுவது முதலிய கெட்ட நடத்தையை கற்றுக்கொள்ளுகிறார்கள். சுருட்டுக்காக பணத்தைத் தம் பெற்றோரிடமும் பிறரிடமும் தகாத வழிகளில் அடைகிறார்கள்.

இக்கெட்ட வழக்கம் சிறுவர்களுக்குள் பரவுவதை அடியோடு நிறுத்த நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம். பெரியவர்களும் இவ் வழக்கத்தை விட்டுவிடவேண்டும். அது கூடாது போனாலும் இளம்பிராய முள்ள பிள்ளைகளின் முன் பெற்றோர்கள் சுருட்டு அல்லது புகையிலை உப யோகிப்பதை நிறுத்தவேண்டும். தமக்காக சுருட்டு வாங்கிவரத் தங்கள் குழந்தைகளைக் கடைக்கு அனுப்புகிற வழக்கத்தையும் விடவேண்டும். மக்களின் ஒழுக்கத்தையும் நாகரீகத்தையும் விரும்புகிற தாய் தகப்பன்மார் இது விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையா யிருத்தல் அவசியமாகும்.

புகையிலையானது மிகுந்த அளவில் உபயோகிப்பதால் உயிர்ச்சேதம் உண்டாக்கக்கூடியதும் எந்த அளவிலும் உடம்புக்குக் கெடுதியும் அசௌ கரியமும் உண்டாக்கக்கூடியதுமான ஓர் விஷ வஸ்து எனற உண்மை யாதொரு சந்தேகமுமில்லாமல் நிச்சயிக்கப்பெற்றிருக்கிறது. புகைக்குடியினால் சுவாசம் அசுத்தமாகிறது; ஜீரணம் நாசமாகிறது. வயிற்றில் புளிப்பும் பித்தமும் அதிகரிக்கிறது. வாய் துர்நாற்றமடைகிறது. உதடும் பற்களும் கறுப்படைகின்றன. கட்டுகளில் துர்நீர் சேருகிறது. தொண்டைக்கட்டும் இருமலும் குடிகொள்ளும். காதிலும் நோய்கள் உண்டாய் கேட்கும் சக்தி குறைகிறது. ருசியும் மோப்ப சக்தியும் தொலைகிறது. ரத்தம் கெடுகிறது. மூளை சங்கடப்படுகிறது. இரத்தாசய வேகம் குறைகிறது. பார்வை மங்கிப்போகிறது. நரம்புகள் உறுத்தலடைகின்றன. தசைநார்கள் போக்கை அடைகின்றன. லிவர் என்ற கருவி அடைப்படுகிறது. தோல் கறையிடுகிறது. தேகத்தில் எந்த உறுப்புகளும் விஷ சம்பந்தமும் கெடுதியும் அடைகின்றன. சக்தியைக் குறைத்து இந்திரிய சக்திகளை வலியறுத்து வாழ்நாளைக் குறைத்து முடிவில் அவைகளைக் கொல்வதுதான் புகையிலையினுடைய வேலை.

மலை சுரத்தினால் சாதாரணமான காயலா தேசங்களில் வசிக்கும் ஜனங்கள் வெளுத்த முகமும் குறைந்த வளர்ச்சியும் குறைந்த தேகபலமும் உடையவர்களாயிருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். உயிரோடு ஜீவித்து

தான் வருகிறார்கள். ஆனால் மனிதவாழ்க்கை என்ன என்ன அடங்குமோ அவற்றில் பகுதிகூட அவர்கள் வாழ்க்கையில் இல்லை. அதுபோலவே தான் புகைக்குடிப்போர்களின் கதியும். புகைக்குடிப்பதைப் பற்றி மேலே சொன்ன விஷயங்களெல்லாம் அப்படியே புகையிலை சாப்பிடுவதும் பொடிப் போடுவதும் ஆகிய துர் வழக்கங்களுக்கும் பொருந்தும்.

U. S. பெரியசாமி முதலியார்.

குறிப்பு:—நேயர்களே! புகையிலையால் உண்டாகும் கெடுதியைப் பற்றி முன்பும் நமது சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறோம். பல பத்திரிகைகளில் அதன் தீங்கைப்பற்றி எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. மேல் நாட்டாரே அதன் தீங்கைப் பரீட்சித்தறிந்து வெளியிட்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் நம் நாட்டில் மாணவர்களும் 5, 6 வயது பிள்ளைகளும் கூட பகிரங்கமாகப் பீடி, சிகரெட் பிடிக்கிறார்கள்.

நம்மவரோ பத்திரிகைகளிலுள்ள விஷயங்களை வேடிக்கைக் கதைகள்போல் படித்து மறந்துவிடும் புத்திசாலிகளாக விருக்கிறார்களேயன்றி அவற்றில் கூறியபடி நடந்தால்தான் பயனடைவோம் என்று கருதுகிறார்களில்லை. இதனால் பத்திரிகைகளாலடையவேண்டிய பயனை யடியோடிழந்துவிடுகின்றனர்.

ஜபான் தேசத்தில் 20 வயதிற்குக் குறைந்தவர்கள் சுருட்டு பிடித்தால் பெற்றோர்க்கு அபராத தண்டனை விதிக்கப்படும். விற்போர்க்கும் அவ்வாறே. இலங்கையில் வித்தியா இலாகா தலைமையதிகாரியே, மாணவர்கள் சுருட்டு சிகரெட் முதலிய பிடிக்கும் வழக்கத்தைக் கண்டித்து உபாத்தியாயர்களே சிரத்தை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்று சுற்று உத்தரவு அனுப்பியிருக்கிறார். நம் நாட்டாரை யவ்வாறு தீய வழியினின்றும் திருப்ப ஒரு திக்குமில்லை. தீய வழியில் செல்லவேண்டாம் என்று புத்தி கூறுவோர்க்குத் தண்டனை விதிக்க நம் துரைத்தனத்தார் தயாராயிருக்கிறார்கள். பெற்றோரோ தம் மக்களை மேல்நாட்டு நாகரீகத்தில் பழகிவைக்கமட்டும் மிக்க ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்களேயன்றி கெட்ட வழியில் செல்லவொட்டாது அவர்களைத் தடுக்க முயல்கிறார்களில்லை. இதுவும் நம் கெட்டகாலக் கொடுமையே.

இப்போது நம்மவர்கள் மந்திரிமார்கள் பதவியிலும் சட்டசபையிலும் அமர்ந்திருக்கிறார்கள். நம் நாட்டிற்குத் தீங்கை விளைவிப்பதும், நமக்குப் பலம்பொருந்திய சுகதேகிகளாகிய சந்ததியுண்டாகாது செய்வதுமாகிய இக்கொடிய வழியில் செல்லாதவாறு நம் மக்களைத் தடுக்க இவர்கள் முயற்சி யெடுத்துக்கொள்ளவேண்டாமோ? ஆண்டவனே இவர்கள் மனதை யிதில் திருப்பவேண்டுமாய் நாம் பிரார்த்திப்போமாக. ஓம்தத்ஸத்.

பத்திராதிபர்.

அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(439-ம் பக்கத் தொடர்ச்சி.)

மனோகரன்:—அய்யோ கடவுளே!

ஆன:—உண்மையாகவே உன்மேல் இக்குற்றத்தைச் சாட்டி உன்னைக் கைது செய்யவேண்டுமென்றே என்னை யமர்த்தியது. ஆனால் அவன் ஒரு பெரிய தவறு செய்துவிட்டான்.

மனோ:—என்ன தவறு?

ஆன:—என் சுபாவமறியாமல் தவறான ஆசாமியைத் தன் இரகசியத்தில் சேர்த்துக்கொண்டான். என் பெயர்கொண்ட துப்பறிபவன் இன்னொருவனிருக்கிறான். அவனிருந்தால் இவன் நோக்கத்தை யறிந்து அப்படியே நடந்துகொண்டிருப்பான். நான் ஆரம்பத்திலேயே இவர்கள் உன்னை யொழிக்கச் சகல அத்தாட்சியும் மிக்க தந்திரத்தோடு ஜோடித்து வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேன்.

மனோ:—இப்போது அவர்கள் நோக்கமென்ன?

ஆன:—இப்போது என்னை யிதில் சம்பந்தப்படுத்தியது தவறென்று அறிந்துகொண்டார்கள். ஆகையால் உன்னைக் கொல்லத் தீர்மானித்து விட்டிருக்கிறார்கள்.

மனோ:—ஆஸ்திதானே அவர்கள் நாட்டம்? அப்படியிருக்க ஏன் அவர்கள் அம்பாலிகையைக் கொன்றுவிடலாகாது?

ஆன:—அவன் ஒரே கல்லால் இரண்டு குருவிகளையும் சுடப்பார்த்தான். அதாவது அம்பாலிகைமேல் கருப்பண்ணன் காதல்கொண்டிருக்கிறான். அதனால் உலகிற்கு அவளை யிறந்தவளாக நிரூபித்துவிட்டு ஆஸ்தியைப் பற்றிக்கொண்டு, பிறகு அவளை அன்னியதேசத்திற்குக் கொண்டுபோய் அங்கு மணம் செய்துகொள்ளலாம் என்று அவன் கருத்து.

மனோ:—நான் உடனே சென்று உண்மையைக் கூறும்படி யவனைக் கட்டாயம் செய்கிறேன்.

ஆன:—அப்படியானால் நான் இந்த விவகாரத்தை யடியோடு கைவிட்டு விடவேண்டியதே.

மனோ:—அப்படியானால் இவ்வளவு அத்தாட்சிகளை வைத்துக்கொண்டு அவனை யேன் உடனே கைது செய்யாமலிருக்கிறாய்?

ஆன:—எல்லாம் தெரிந்திருந்தாலும் ஒன்றையேனும் ருசுப்படுத்த இப்போது முடியாது. இதோடு சுலபமாய் நமது காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய வழியொன்றிருக்கிறது.

மனோ:—அம்பாலிகையைக் கொண்டுவரும்படி யவனைக் கட்டுப்படுத்தலாமே.

ஆன:—உனக்குச் சட்டசமாசாரம் தெரியாது. முதலாவது அவன் இறக்கவில்லையென்று ருசுப்படுத்த உன்னால் முடியாது.

மனோ:—அந்தோ! அம்பாலிகை அத்துஷ்டன் கரத்தில் சிக்கிக்கொண்டு தானே யிருக்கிறாள்.

ஆன:—அதற்காக நீ சற்றும் பயப்படவேண்டாம். நான் அவளை நெடுநாள் அவனிடமிருக்கவைக்கமாட்டேன்.

மனோ:—அந்தோ அவன் பலவந்தப்படுத்தி தன்னை மணம் செய்யும்படி செய்துவிடுவானே. இதுவரையில்கூட செய்துவிட்டிருப்பானே.

ஆன:—ஒருகாலும் முடியாது. இன்னும் 12 மணி நேரத்திற்குள் அவன் காலுக்கு ஒருவித விலங்கு பூட்டிவிடப்போகிறேன். பிறகு அவன் மிக்க ஆலசியமாய் கலவரத்தோடும் சந்தேகத்தோடும், திகிலோடுந் தான் மெதுவாய்த் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நகர்ந்து போகவேண்டும்.

மனோ:—அப்படியாயின் நான் 48 மணி நேரம் உன் கட்டளைப்படி யடங்கி யிருக்கிறன்.

ஆன:—அதோடு நீ மிக்க ஜாக்கிரதையோடு இருக்கவேண்டும்.

மனோ:—நான் எந்நேரமும் கையில் ஆயுதத்தோடுதானிருக்கிறேன்.

ஆன:—உன் தேகபலத்தையும் தைரியத்தையும் நம்பிக்கொள்ளாதே. வெளிப்படையாய் வரும் சுத்தவீரனை வென்றுவிடலாம். சூதாக இரகசியத்தில் நம்மைக் கொல்லவரும் எதிரியைச் செயிப்போமென்று நம்பலாகாது. இப்போதிருக்கும் எதிரிகளோ சூதுவாதாய் இரகசியக் கொலைகள் செய்கிறவர்களே.

மனோ:—எனக்கு எப்போது சமாசாரம் கூறுவாய்?

ஆன:—நாளை காலை நீ உன் விலாசத்தை யெனக்குக் கொடுத்துச் செல்லவேண்டும். ஏனெனில், எந்த சமயத்தில் நான் உன்னை வரவேண்டுமென்றாலும் நீ ஆயத்தமாயிருக்கவேண்டும்.

மனோ:—உன் பிரியப்படி நடப்பேனென்று நீ பூரணமாய் நம்பலாம்.

ஆன:—"போதும், இது போதும்; நீமட்டு மிதன்படி நடந்தால் நான் அம்பாலிகையைப் பூரண சுகத்தோடு கற்பழியாமல் உன்னிடம் ஒப்புவிக்கிறேன். இதற்காக என் கௌரவத்தையும் இதுவரையில் நானடைந்த பிரக்யாதியையும், சே! என் உயிரையுமே பந்தயம் வைக்கிறேன்" என்றான். (தொடரும்.)

ஆரணி. குப்புசாமி முதலியார்.



பொது சமாச்சாரங்கள்.

ஸ்ரீ பழனியாண்டவர் சந்நிதிக்கு வந்த சர்ப்பக்காவடியின் மகத்துவம்.

இவ்வருஷமும் ஆண்டவர் சந்நிதிக்கு கணக்கில்லா காவடி வந்ததில் சர்ப்பக்காவடியும் ஒன்று. இதின் உண்மையை தெரிந்துகொள்ளும் பொருட்டு மகம்மதியர், கிறிஸ்தவர் உள்பட பெருங் கூட்டமாக வந்து காத்திருந்தார்கள். ஷை சர்ப்பக்காவடி மண்பாண்டத்தோடு கூடியது. இடும்பர் சந்நிதியின் முன், ஒருவர் பக்தி மேலிட்டவராய் ஷை காவடி என்னும் பாண்டத்தின் வாய்ப்பக்கத்தை உடைத்தார். உடனே ஒரு பெரிய நல்ல சர்ப்பம் படம் விரித்தாடியதையும் அதற்கு மசால் சாமான் முதலில் சேர்த்தவை யெல்லாம் அந்நாகத்தின் முகம் உடலெல்லாம் ஒட்டியிருப்பதையும் பார்த்தவருள்ளம் பதறவும், பக்தியின் மேன்மையை யுணரவுமாயிற்று. ஆண்டவனருளை ஆதிசேஷனாலும் புகழவியலுமோ! பிறகு அங்கிருந்த சாமியார் ஒருவர் படம் விரித்தாடிய வண்ணமாயிருந்த அந்த சர்ப்பத்தை எடுத்து தன் கழுத்தில் மாலைபோலணிந்ததோடு, ஆண்டவர் அருகில் விட்டுவிட எண்ணி ஒவ்வொரு படியாக ஏறினார். அப்படி ஏறும்போதெல்லாம் அந்த சாமியாரை இரத்தம்வரக் கடித்தது. அதனால் ஒருவித உபாதையுமில்லை. அவர் படி ஏறாமல் சும்மா யிருக்கும் சமயம் ஒன்றும் செய்யாதிருப்பதைக்கண்டு கீழ் உள்ள பாறையின் கற்கள் பக்கம் விட இப்படி செய்கிறதோவென்று யூகித்து, அந்த விடத்திலே விடவும் தாமதமின்றி சரசரவென்று கற்பாறைக்குள் சென்று மறைந்துவிட்டது.

இக்காலத்தில் இவ்வித அபூர்வ சம்பவம் நிகழ்வதால் மனிதஜென்மமெடுத்த ஒவ்வொருவருக்கும் உண்மையான பக்தியும், விசுவாசமுமிருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று கும்பகோணம் ஸ்ரீமான் ஆர்.முத்துக்குமாரசாமி நாடார் எழுதுகிறார்.

ஐம்பது அடி நீளமுள்ள இலை.

அமெரிக்காவில் உள்ள ஆமேசான் என்னும் பெரிய நதிக்கரை யோரங்களில் வளரும் ஓர்வித மரத்தின் இலைகளொவ்வொன்றும் 50 அடி நீளமும் 12 அடி அகலமுள்ளதா யிருக்கின்றது. இதிலும் பெரிய இலைகள் உலகத்தில் வேறெங்கும் கிடையாது.

உலகத்திலுள்ள எல்லா ஜெந்துக்களிலும் பெரியது க்ரீங்லெண்டு திமிங்கலம். அதினுடைய நிறை சராசரி நூறு டன் அதாவது 2,20,000 பவுண்டு. ஏறக்குறைய 88 யானைகள் நிறைக்குச் சமானமாம். அததிமிங்கலத்தின் எலும்பின் நிறைமாத்திரம் 3400 பவுண்டாம். அதிலிருந்து இறக்கப்படும் எண்ணெய் 75 டன் நிறையுள்ளதாம்.

ஓர் அதிசயம்—யாழ்ப்பாணத்தில் கொப்பறாப் போடுதற்கு நூற்றுக் கணக்காய்த் தேங்காய் உடைக்கும்போது அத்தேங்காய் ஒன்றில் பஞ்சு காணப்பட்டதாம். பஞ்சைப் பிரித்தெடுக்கும்போது அதற்குள்ளே புளியங்கொட்டைப் பருப்பத்தில் ஒரு விலைபெற்ற முத்துக் காணப்பட்டதாம். மிகப் பிரபை பொருந்தியுள்ளதென அறிகிறோம்.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

இரக்தாக்ஷி௵ ஆடி௴—கலியுகாதி 5026—சாலிவாகனம் 1847,
பசலி 1334—கொல்லமாண்டு 1099-1100—ஹிஜரி 1342-1343,
இங்கிலீஷ் 1924௵ ஜூலை௴—ஆகஸ்டு௴

ஆடி௴	ஜூலை௴	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்.	யோகம்.	விசேஷங்கள்.
1	16	புத	○23-33	பூரா11-8	அமி60	பௌர்ணமி, போதாயன சூத்திர சர்வஉபாகர்மம்
2	17	வியா	பிர21-8	உத்5-23	சித்60	
3	18	வெ	துதி14-50	திரு0-38 அவி57-20	மர0-38சி	
4	19	சனி	திரி9-58	சதை55-43	அ55-43ம	
5	20	ஞா	சது6-53	பூரட்55-58	சி55-58அ	
6	21	திங்	பஞ்5-33	உத்-58-5	சித்60	
7	22	செவ்	சஷ்6-20	ரேவதி60	சித்60	
8	23	புத	சப்8-40	ரேவ-2-0	மர60	
9	24	வியா	அ12-38	அசு7-33	அ7-33சித்	
10	25	வெ	நவ17-50	பர✕14-5	சித்60	
11	26	சனி	தச23-38	கிரு21-20	அமி60	மாடுவாங்க, கடன் தீக்க
12	27	ஞா	ஏ29-35	ரோ28-43	சித்60	சீமந்தம்
13	28	திங்	து35-20	மிரு35-55	அ35-55சி	தானியம் செலவிட
14	29	செவ்	திர40-25	திரு42-33	ம42-33சி	பிரதோஷம் [செலவிட
15	30	புத	சது44-43	புன48-20	சித்60	கோடியுடுக்க, தான்யம்
16	31	வியா	●அ48-5	பூச53-5	அ53-5சித்	சர்வத்திர அமாவாசை
17	1	வெ	பிர50-13	ஆயி56-50	மர60	சிராவணசுத்தம்
18	2	சனி	துதி51-20	மக59-30	அ59-30சி	சந்திரன்4ம் பிறைபோல்
19	3	ஞா	திரி51-18	பூரட்60	சித்60	ஆடிப்பூரம் [தெரியும்
20	4	திங்	சது50-40	பூர1-8	சித்60	நாகசதுர்த்தி
21	5	செ	பஞ்47-58	உத்1-45	அ1-15சித்	பிரதம ருக் உபாகர்மம்
22	6 (1924௵ ஆகஸ்டு௴)	புத	சஷ்44-38	அஸ்0-55 சித்59-18	மர0-55சி	சஷ்டி, சூரியசஷ்டி, ஹல சஷ்டி, அவமாகம்
23	7	வியா	சப்40-23	சுவா56-43	அ56-43சி	உபனயனம்
24	8	வெ	அ35-20	விசா53-15	சித்60	வரலட்சுமி விரதம்
25	9	சனி	நவ29-23	அனு49-0	சித்60	பிரயாணம் விலக்க
26	10	ஞா	தச22-48	கேட்44-18	ம44-18அ	ததிவிரதாரம்பம்
27	11	திங்	ஏ15-50	மூல39-18	சி39-18ம	மத்வ சர்வ ஏகாதசி
28	12	செ	துவா8-45	பூரா34-10	சி34-10அ	பிரதோஷம்
29	13	புத	திர1-50 சது55-23	உத்31-55	அ31-55சி	அவமாகம், மாடுவாங்க
30	14	வியா	○19-33	திரு25-18	சித்60	ருக் யஜுர் உபாகர்மம்
31	15	வெ	பிர45-3	அவி22-0	சித்60	மக கார்த்திகை 47-53 காயத்ரீ ஜெபம்

			சுக்
கே செ	11உ சிம்-புத		சூரி புத
			ராகு
	குரு	சனி	

Printed & Published by N. Munisawmi Mudaliar at the "Ananda Bodhini" Power Press, 15, Venkatesa Maistry St., Madras.